ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

27.07.2016 - மலர் 13, இதழ் 22



## வேற்றுக் கிரகவாசிகளைத் தேடும் ரொபோ ரொபர்ட்

## மண் வளத்தைப் பாதுகாக்கும் மண்புழு உரம்

## ஓசோன் தினத்தையொட்டி:
சுவரொட்டி/ பேச்சுப் போட்டி

பணப் பரிசில்கள்...

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சை சமவெளியில் வசித்து வந்த கழுதை, ஆடு மற்றும் ஒட்டகம் என்பன நல்ல நண்பர்கள். இவை மூன்றும் உணவு தேடிச் செல்லும்போது, ஒரு வைக்கோல் கட்டினைக் கண்டன. மூன்று நண்பர்களும் கடும் பசியில் இருந்தமையால், அதனை தனித்தனியாக உண்பதற்கு தம்மிடையே சண்டையிட்டுக் கொண்டன.



1. கதையில் வரும் விலங்குகள் எவை?

.........................................................................

2. அவை எங்கே வசித்து வந்தன?

.........................................................................

3. மூன்று நண்பர்களும் உணவு தேடிச் செல்லும்போது எதனைக் கண்டன?


.........................................................................

4. அவை எதற்காக தம்மிடையே சண்டையிட்டுக் கொண்டன?

.........................................................................

இங்குள்ள காட்சிகள் இடம்பெற வேண்டிய ஒழுங்கு முறையை 1,2,3,4 என முறையே இலக்கமிட்டுக் காட்டுக.








# My name is Neeta



1. சிறுமியின் ஆடையிலுள்ள அலங்காரம் யாது?

   1. இலை அலங்காரம்
   2. பூ அலங்காரம்

2. சிறுமியின் பெயர் யாது?

.........................................

3. சிறுமி பாதணி

.........................................

4. சிறுமியின் தலைமுடி

......................... நிறமானது.



இது ஒரு .................... (தோகை / மயில்) ஆகும். இது .................... (மிருகம் / பறவை) இனத்தைச் சேர்ந்தது. ஆண் .................... (மயில் / குயில்) தோகை விரித்து ஆடும். அவ்வாறு ஆடும் காட்சி .................... (அருவருப்பானது / அழகானது). மலைப்பிரதேசங்கள், .................... (குகைகள் / காடுகள்) இவற்றின் வசிப்பிடங்களாகும்.

ஜீநு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவலைப்படுவதை தவிர்த்து வாழ்க்கையை வெற்றிகரமாக எதிர்கொள்ளுங்கள்

**எப்பொழுதும் ஏதேனுமொன்றை எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் நண்பர்கள் உங்களிடையே இருக்கக் கூடும். இவர்களைப் போன்றே, எந்நேரமும் கவலையுடன் காணப்படும் பலரும் நம்மிடையே உள்ளனர். இவர்களை அவதானிக்கும்போது, இதுதான் மனித குலத்தின் இயல்பா? என எண்ணத் தோன்றுகிறது. ஆனால், வாழ்க்கை என்பது இன்பமும் துன்பமும் கலந்தது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.**

மனித வாழ்வில் துன்பம், அவதூறு, அயர்ச்சி, இன்பம், சுகம், துக்கம், பாராட்டுக்கள், தூற்றல், போற்றல் என்பன ஏற்படுவது தவிர்க்க முடியாத விடயங்களாகும். இவற்றில் கவலை தரும் விடயங்களை







வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான ஆற்றல்களை நாம்தான் வளர்த்துக் கொள்ள வேண்டும். கவலைப்படுவதனால் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது.

கவலைப்படுதல், அழுதல், சோகமாக இருத்தல் என்பன வாழ்வின் அங்கம் அல்ல. எனவே, வாழ்க்கையை பின்னோக்கித் தள்ளுகின்ற, உற்சாகத்திற்குத் தடையாக இருக்கின்ற இவ்வாறான பழக்கங்களைக் கைவிடுவது அவசியமாகக் கருதப்படுகின்றது. எதிர்பாராத துன்பங்கள் நேரும்போது, அதற்காக மற்றவர்களைக் குறைகூறுவதைத் தவிருங்கள். துன்பத்திலிருந்து மீள வேண்டும் என்ற சிந்தனை மட்டும் போதாது; செயற்படுவதும் அவசியமாகும். இதுவே, எதிர்கால வாழ்வின் வெற்றிக்கு வழிவகுக்கும். இவ்வாறான செயற்பாடுகள் பிள்ளைகளுக்கு பெரும் வெற்றியை தரும்.

எமது வாழ்க்கையில் சோகம், துன்பம், பின்னடைவு என்பன ஏற்படும்போது, அவற்றைப் பற்றி சிந்தித்து ஸ்தம்பிதமடையாமல் அந்த எண்ணங்களைக் கைவிட்டு சுறுசுறுப்பாக இருக்க முயற்சிக்க வேண்டும். இதனால் மனதில் உத்வேகம் பிறக்கும். செயற்பாடுகளில் வெற்றி ஏற்படும். துன்பங்களை தகர்த்து தன்னம்பிக்கையுடன் செயலாற்றும்போதுதான் துன்பங்களை வெல்ல முடியும்.



விஜய
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

## அழுது புலம்புவதனால் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டுமா?

ஒருவர் இறந்தால் அல்லது நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டால், அவருக்கு நெருக்கமானவர்கள் கவலைப்படாமல் இருப்பார்களாயின், அது பெரும் குறை என்ற எண்ணம் எமது சமூகத்தில் நிலவுகின்றது. இவ்வாறான நிலையில், கண்ணீர் விட்டுக் கதறி அழுவதேயன்றி, மனதைத் தேற்றிக்கொள்வது தவறானதா? என்ற கேள்வி எழுகின்றது.

சோகம் தரும் சம்பவங்கள் வாழ்வில் நிகழத்தான் செய்கின்றன. வாழ்க்கையின் யதார்த்தத்தினை புரிந்துகொள்ளாத பக்குவமற்றவர்கள் இவ்வாறு அழுது புலம்புவதும் சோகமாக இருப்பதும் பொதுவான விடயமாகும்.

எனினும், எமக்கு ஏற்படும் இத்தகைய துன்பங்களுக்கு முகம் கொடுத்து வாழ்க்கையை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் சக்தியை நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும். இதனால், கவலைகளும் பிரச்சினைகளும் மறைந்து போகும்.

எனவே, துன்பங்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளப் பழகுங்கள். உங்கள் மத்தியில் துன்பப்படுபவர்கள் இருந்தால், அவர்களை



அன்புடன் அணுகி - ஆறுதல் வார்த்தைகள் கூறுங்கள். துன்பத்தில் ஆழ்ந்திருப்பவர்களுக்கு உதவத் தயங்காதீர்கள். பாடசாலை மாணவர்களிடையே சுறுசுறுப்பாக இயங்கும் ஆற்றலும் சக்தியும் உள்ளதனால், இவ்வாறான சூழ்நிலைகளில் தயக்கம் இன்றி ஈடுபட முடியும்.

free SPOKEN ENGLISH
Golden Way Home Study Pack with CDs.
மிக சரளமாக ஆங்கிலம் எழுத, பேச, வாசிக்க
வீட்டிலிருந்தவாரே இலவசமாக கற்கலாம்.
பாடநெறி முடிவில் Diploma சான்றிதழ் வழங்கப்படும்.
SMS Your Name & Address
0777 280 834
இலவசம்.
பாடசாலை மாணவர்களுக்கு மட்டும்
LONDON ENGLISH EDUCATIONAL SYSTEM
# 317/A.D.S .Senanayake St. P.O.Box. 119 , Kandy. Sri Lanka
Tele.0813-840 815 Facebook- lees spoken english

noolaham.org | aavanaham.org


# அன்னதானம்

சூதன் என்பவனும் அவனின் மனைவியும் பிறரை ஏமாற்றி வாழ்ந்து வந்தனர். ஊரிலுள்ள அனைவரிடமும் "நாங்கள் நாள்தோறும் பத்துப் பேருக்கு அன்னதானம் அளிக்கிறோம். ஆதலால் உங்களால் இயன்ற உதவிகளைச் செய்யுங்கள்" எனக் கூறி பணமோ, பொருட்களோ வாங்கிக்கொள்வார்கள். ஆனால், அவர்கள் யாருக்கும் ஒரு பிடி சோறுகூட போடமாட்டார்கள். இவர்கள் அன்னதானம் கொடுப்பதாக எண்ணி வீட்டிற்கு யாரேனும் வந்தால் "ஐயா! சற்று முன்னர்தான் பத்துப் பேருக்கு வயிறார உணவளித்தோம். நீங்கள் நாளை வாருங்கள்" என்று ஏமாற்றிவிடுவார்கள்.

இதனை கேள்விப்பட்ட காந்தன் என்பவர் சூதன் வீட்டிற்கு சாப்பிடச் செல்ல வேண்டும் என்று முடிவெடுத்து, நண்பகல் நேரத்தில் அவன் வீட்டிற்கு சென்றார். "ஐயா! உங்கள் அன்னதானத்தைப் பற்றி பலரும் புகழ்ந்துள்ளார்கள். அதனை கேள்விப்பட்டு உங்களைத் தேடி வந்தேன்" என்றான் காந்தன். "உண்மைதான் அன்பரே. ஆனால், சற்று முன்னர்தான் பத்துப் பேருக்கு விருந்து படைத்தேன். அவர்களும் மகிழ்ச்சியுடன் உண்டு சென்றார்கள். நீங்கள் சற்று தாமதித்து வந்துள்ளீர்கள் நாளை வாருங்கள்" என்று இனிமையாகப் பேசினான் சூதன். "சரி நாளை வருகிறேன்" எனக் கூறி சென்றான் காந்தன். மறுநாள் விடியற்காலை நான்கு மணிக்கே சூதனின் வீட்டுக் கதவை தட்டினான் காந்தன். தூக்கக் கலக்கத்துடன் எழுந்த சூதன், "இந்த நேரத்தில் யார் கதவைத் தட்டுவது?" என்று கேட்டுக் கொண்டே கதவைத் திறந்தான். "ஐயா! இன்று உங்கள் வீட்டு விருந்திற்கு முதல் ஆளாக வந்துள்ளேன்.விருந்து தயாரானதும் எழுப்புங்கள்" எனக் கூறிக்கொண்டு வீட்டுத் திண்ணையில் படுத்துறங்கினான் காந்தன். உள்ளே வந்த சூதன், மனைவியிடம் "நேற்று அன்னதானத்திற்காக நண்பகலில் வந்தவன் இன்று விடியற்காலையிலேயே வந்து உணவு உண்ண வேண்டும் என நம் திண்ணையில் உறங்குகிறான்" என்றான். "இதற்காகவா கவலைப்படுகிறீர்கள்? "என் மனைவிக்கு உடல் நிலை சரியில்லை. நாளை வாருங்கள்" என கூறுங்கள் என்றாள் மனைவி. இதனைக் கேட்ட சூதன் அவ்வாறே, "என் மனைவிக்கு உடல்நிலை சரியில்லை. சமைக்க முடியாத நிலையில் உள்ளதால் நீங்கள் நாளை வாருங்கள் கண்டிப்பாக விருந்து சாப்பிடலாம்" என்றான்.

"அட இதற்காக அன்னதானத்தை யாராவது நிறுத்துவார்களா? பதினாறு வகைக் கறிகளோடு அன்னதானத்தை நான் செய்கிறேன்" என சூதனின் வீட்டின் சமையலறைக்கு சென்றான் காந்தன். இதை சிறிதும் எதிர்பாராத சூதனும், அவன் மனைவியும் திகைத்தனர். சமையலை முடித்த காந்தன், "நான் முகம் கழுவிவிட்டு வருகிறேன் அனைவரும் சேர்ந்து சாப்பிடுவோம்" என்றான். 'எப்படி இவனுக்கு உணவு கொடுக்காமல் விரட்டுவது' என்று இருவரும் யோசித்தனர். அப்போது மனைவி கூறினாள் "நம் இருவரும் சண்டையிட்டுக்கொண்டால் அவன் சென்றுவிடுவான்" என்றான். ஆம் இது "நல்ல திட்டம்" எனக் கூறிய சூதன். காந்தன் திரும்பி வரும்போது, சூதன் உரத்த குரலில் "வீடு தேடி வந்தவருக்கு உன்னால் சமைத்துக் கொடுக்க முடியாதா?" எனக் கூறிக்கொண்டு மனைவியுடன் வாக்குவாதம் செய்தான். இதனைப் பார்த்த காந்தன் எந்த அசைவுமின்றி உணவிற்கு காத்திருந்தான். இதனால், மனைவிக்கு அடிப்பதைப் போன்று சூதன் நாடகமாடினான்.

பின்னர் சூதன் வெளியே பார்த்தான் ஆனால், அங்கு காந்தன் இருக்கவில்லை. "அப்பாடா சென்றுவிட்டான். எப்படி என் திறமை உனக்கு வலிக்காமல் அடித்தேன்" என கூறினான் சூதன். "நானும் சளைத்தவளா? பொறுமையாக இருந்தேன் தானே" என பதிலளித்தாள் மனைவி. அப்போது "நான் மட்டும் உங்களுக்குச் சளைத்தவனா? இவ்வளவு நேரமும் வெளியில் அமைதியாக இருந்தேனே" என கூறிக் கொண்டு காந்தன் மீண்டும் சூதனின் வீட்டினுள் வந்தான். தங்களது ஏமாற்று வித்தை இவனிடம் செல்லாது என எண்ணிய சூதனும் அவன் மனைவியும் காந்தனுக்கு அன்னதானம் கொடுத்து அங்கிருந்து அவனை வழி அனுப்பி வைத்தனர்.



# சித்து வேலை


இலஞ்சி என்ற ஊரில் ராஜன் என்றொரு இளைஞன் வாழ்ந்தான். அவன் சித்து வேலை எனும் மாயாஜால வித்தையை கற்றுக்கொள்ள ஆசை கொண்டான், ஒருநாள் துறவி ஒருவர் ராஜன் வீட்டருகே வந்து "குடிக்கத் தண்ணீர் கிடைக்குமா?" என ராஜனிடம் கேட்டார். ராஜனோ துறவியை வீட்டின் உள்ளே அழைத்துச் சென்று சிறந்த விருந்துபசாரத்துடன் பணிவிடைகள் செய்தான். ராஜனின் நற்குணத்தை அறிந்துகொண்ட துறவி "மகனே! உனக்கு வேண்டியதைக் கேள் தருகிறேன்" என்றார். "சுவாமி, உங்களைப் போல் எனக்கும் சித்து வேலைகள் தெரிய வேண்டும். அதனை தாங்கள் எனக்கு கற்றுத்தர வேண்டும்" என்றான்.

"மகனே, நான் பலகாலம் தவமிருந்து பெற்ற அந்த அற்புத சக்தியை எவ்வித துன்பத்தையும் அடையாது பெற்றுக்கொள்ள ஆசைப்படுகிறாய். சரி இந்த ஓலை சுவடியிலுள்ளதைக் கற்றுக்கொள்" என கூறி ஓலைச் சுவடியை கொடுத்தார் துறவி. ராஜனும் ஓலையில் உள்ள மந்திரங்களை மனப்பாடம் செய்துகொண்டு ஓலைச் சுவடியை வீட்டில் பத்திரமாக வைத்திருந்தான்.


ஒருநாள் காட்டு வழியாக ராஜன் பயணித்துக் கொண்டிருந்தான். வழியில் நாலைந்து வேட்டைக்காரர்கள் ஒரு சிங்கத்தைக் கூண்டில் அடைத்து, அதை வண்டியில் ஏற்றிக்கொண்டு சென்றனர். கூண்டிலிருக்கும் சிங்கத்தைப் பார்த்த ராஜன், 'கூண்டிற்குள்ளிருக்கும் பிராணிகளை வெளிக் கொண்டுவரும் சித்து வேலையைப் சோதித்து பார்ப்போம்' என்ற எண்ணத்துடன், ஒரு மந்திரத்தைச் சொன்னான். அடுத்த கணம் கூண்டிற்குள்ளிருந்த சிங்கம் பயங்கர கர்ஜனையுடன் வெளியே வந்து வேட்டைக்காரர்களில் ஒருவன்மீது பாய்ந்து அவனைக் கொன்றது. இதனைக் கண்ட மற்ற வேட்டைக்காரர்கள் மிகுந்த சாமர்த்தியமாக செயல்பட்டு மறுபடியும் சிங்கத்தை கூண்டில் அடைத்தார்கள்.

இதனைக் கண்ட ராஜன் "நான்தான் சிங்கத்தை வெளியே வருமாறு செய்தவன் இதோ, எனது மந்திர சக்தியால் மீண்டும் அதனை வெளியே வரவழைக்கிறேன்" என்று வேட்டைக்காரர்களிடம் கூறினான். ராஜனின் பேச்சைக் கேட்ட வேட்டைக்காரர்கள் அவன் ஒரு மாயாவியோ என்று பயந்தனர். ஆனாலும், பயத்தை வெளியே காட்டிக் கொள்ளாது, "நீதான் இந்தச் சிங்கத்தைக் கூண்டிலிருந்து வெளியே வரச் செய்தவனா? எங்கள் நண்பர்களில் ஒருவன் இறந்தது உன்னால்தான்... உன்னைச் சும்மா விடமாட்டோம்" என்று கூறியபடியே, ராஜனை நையப் புடைத்தார்கள். இதனால், ராஜன் மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டான்.

"இதுதான் சரியான சமயம் இவன் மயக்கமாக இருக்கிறான். இப்போது சிங்கம் உள்ள இந்த வண்டியை நாம் இழுத்துக் கொண்டு போய்விடுவோம். இல்லையெனில் உதைபட்ட ஆவேசத்தில் மீண்டும் இவன் சிங்கத்தை வெளியே வரவழைத்துவிட்டால் நாம் அனைவரும் இறக்க நேரிடும்" என்று நினைத்த வேட்டைக்காரர்கள் சிங்கத்தை அடைத்துள்ள வண்டியை வேகமாக இழுத்துச் சென்றுவிட்டனர். வெகு நேரம் கழித்து கண்விழித்த ராஜன் 'எவ்வித துன்பமின்றி மாய வித்தையை கற்றுக் கொண்டதன் பயனால்தான் இவ்வாறான துன்பத்திற்கு ஆளாகினேன்' என மனம் வருந்தினான்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



★ மனிதனின் வயிற்றில் அதிக எண்ணிக்கையிலான செல்கள் காணப்படுகின்றன. இவை ஏறத்தாழ 10 கோடி ஆகும்.



★ எமது ஞாயிற்றுத் தொகுதியில் புதன் கோளில்தான் வெப்பநிலை மாறுதல்கள் மிக அதிகமாக நிகழ்கின்றது. அதன்படி, பகலில் 840 டிகிரி ஃபாரன்ஹீட், இரவில் மைனஸ் 275 டிகிரி ஃபாரன்ஹீடாக அமைகின்றது.



★ கரப்பந்தாட்ட விளையாட்டு 1895 ஆம் ஆண்டு அமெரிக்காவிலேயே கண்டறியப்பட்டது.

# சர்வதேச ஓசோன் தினம் அனுஷ்டிப்பு 2016
# பாடசாலை மாணவர்களுக்கான தேசிய மட்டப் போட்டி

சூரியனிலிருந்து வெளியாகும் புற ஊதாக் கதிர்களினால் ஏற்படக்கூடிய பாதிப்பிலிருந்து புவியை ஓசோன் படலமே பாதுகாத்து வருகின்றது. ஆயினும், மனிதர்களின் பல்வேறுபட்ட தவறான செயற்பாடுகளின் காரணமாக, இந்த ஓசோன் படலம் பாதிக்கப்பட்டு வருவதுடன், அதன் காரணமாக, புவிவாழ் அனைத்து உயிரினங்களுக்கும் அது பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. எனவே, இது தொடர்பாக, கவனத்தைச் செலுத்தியுள்ள உலகளாவிய சமூகத்தினால் ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதுடன், ஓசோன் படலம் சிதைவதை தடுப்பதற்குமென 'மொன்ட்ரியல்' எனும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. உலகளாவிய ரீதியில் 'மொன்ட்ரியல்' அமைப்பின் வழிகாட்டல்கள் செயற்படுத்தப்பட்டதன் காரணமாக, ஓசோன் படலத்தில் துளை விழுதலின் வேகம் தற்போது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சினது தேசிய 'ஓசோன்' பிரிவு மொன்ட்ரியல் அமைப்பின் இலங்கைக்கான மத்திய நிலையமாக செயற்பட்டு வருகின்றமையின் காரணமாக, சர்வதேச 'ஓசோன்' தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக பல்வேறு நிகழ்வுகள் தேசிய மட்டத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கமைய, இந்த வருடம் செப்டெம்பர் மாதம் 16 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள தேசிய ஓசோன் தினத்தையொட்டி பாடசாலைகளுக்கிடையே தேசிய மட்டத்தில் கீழ்காணப்படும் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

## 1. சுவரொட்டிப் (போஸ்டர்) போட்டி

**தலைப்பு:** ஓசோன் படலத்தில் துளை ஏற்பட காரணமாகின்ற நச்சு வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் ஓசோன் படலத்தைப் பாதுகாப்போம்.

**விதிமுறைகள்:**

- ★ பங்குபற்றக்கூடிய வகுப்புக்கள் - தரம் 10, 11, 12, 13
- ★ வர்ண ஊடகம் - நீர்ச்சாயம் / பெஸ்டல்
- ★ கடதாசி - 18' x 14' (பிரிஸ்டல் போர்ட் அல்லது ஏதேனும் பொருத்தமான கடதாசி)
- ★ போஸ்டரில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சிறிய குறிப்புக்களை இட முடியும்.
- ★ உங்கள் படைப்புக்கள் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

## 2. பேச்சுப்போட்டி

**தலைப்பு:** ஓசோன் படலத்தில் துளை ஏற்பட காரணமாகின்ற நச்சு வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் ஓசோன் படலத்தைப் பாதுகாப்போம்.

**விதிமுறைகள்:**

- ★ கால நேரம்: 5-7 நிமிடங்கள்
- ★ போட்டிப் பிரிவு: தரம் 10, 11, 12, 13
- ★ மேற்காணும் தலைப்பின்கீழ் உரையாற்றுதல் வேண்டும்.

★ சுவரொட்டிப் போட்டியில் கலந்துகொள்ள விரும்புகின்ற மாணவ, மாணவியர் குறித்த போஸ்டர் தமது சுய படைப்பு என்பதை பாடசாலை அதிபர் மூலம் உறுதிப்படுத்தி செப்டெம்பர் மாதம் 02 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

★ பேச்சுப் போட்டியில் கலந்துகொள்ள விரும்புகின்ற மாணவர்கள் தமது சுய விண்ணப்பப்பத்திரத்தை தமது பாடசாலை அதிபரின் ஊடாக 2016 ஓகஸ்ட் 12 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

*உங்கள் ஆக்கங்களையும் விண்ணப்பங்களையும் அனுப்ப வேண்டிய முகவரி:*
(பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்)

*பணிப்பாளர்,*
*தேசிய ஓசோன் பிரிவு*
*மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் துறை அமைச்சு,*
*இல-82, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்லை.*

★ கடித உறையின் இடது பக்க மேல்முனையில் கலந்து கொள்ளும் போட்டியை குறிப்பிடுவதுடன், தேசிய 'ஓசோன் தின அனுஷ்டிப்பு' எனவும் குறிப்பிட மறவாதீர்கள்.

★ **பரிசு விபரங்கள் (சுவரொட்டி/பேச்சுப்போட்டி)**

1 ஆம் இடம் - ரூ 15,000 (சான்றிதழுடன்)
2 ஆம் இடம் - ரூ 12,500 (சான்றிதழுடன்)
3 ஆம் இடம் - ரூ 10,000 (சான்றிதழுடன்)

**நடுவர் குழு**

இத்துறைசார் சுயாதீனமான அங்கத்தவர்களைக் கொண்ட நடுவர் குழுவினால் வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவர். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதித் தீர்ப்பாகக் கொள்ளப்படும்.

2016 செப்டெம்பர் 15 ஆம் திகதி கௌரவ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் நடைபெறும் சர்வதேச ஓசோன் தின தேசிய நிகழ்ச்சியின்போது வெற்றியாளர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு
தொ.பே.இல - *011 2883417*
இணையம்: www.noulanka.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகின் பிரதான மதங்களைப் பற்றி.....



மனிதன் இயற்கையின் மீது கொண்ட பற்றுதலினால் அவற்[...] தொடர்ச்சியாக மதங்கள் உருவாகின. மதம் என்பது அதனைப் [...] அடிப்படையாகக் கொண்டது. ஒரு சில மதங்களில் ஒரு கடவு[...] இத்தகைய மதங்களின் ஆத்மார்த்த நடைமுறைகளால் ஒழுக்க[...] வருகின்றனர்.

உலகில் பிரதானமாக ஆறு மதங்கள் உள்ளன. கிறிஸ்தவம், [...] பிரதான மதங்களாகும். மேலும் பல சிறிய மதங்களும், வழிபாட்[...] மனிதர்களுக்கு ஒழுக்கத்தினையே போதிக்கின்றன. இத்தகை[...] வழங்கவுள்ளோம். அந்தவகையில் இந்து மதத்தைப் பற்றிய சி[...]

# இந்தியாவில் உருவான இந்து மதம்

## 5000 ஆண்டுகள்

உலகின் மிகவும் பழமையான மதமான இந்து மதம் சுமார் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் உருவானது. இந்து மதத்தினைப் பின்பற்றுபவர்கள் படைப்புக்கு கர்த்தவான பிரம்மாவையே முதன்மைக் கடவுளாகக் கருதுகின்றனர். இந்துமதமானது, அமைதியான புனிதமான சிறந்த வாழ்க்கையையே போதிக்கின்றது. இத்தகைய போதனைகள் நிறைந்த இந்து மதத்தினைப் பின்பற்றும் மக்கள் பெரும்பான்மையாக ஆசிய பிராந்தியத்திலேயே வாழ்கின்றனர்.



நா[...] நா[...] ே[...] அ[...] இ[...]

இடமாகவும் கருதப்படுகின்றது. அ[...] உருவங்களுக்கு பூசகர் அபிஷேக[...] விசேட நிகழ்வுகளில் மத ரீதியிலா[...] ஆலயங்களில் இ[...]

## புனிதமான மும்மூர்த்திகள்

இந்துக்களின் மும்மூர்த்திகளாக பிரம்மா, சிவன், விஷ்ணு ஆகியோர் கருதப்படுகின்றனர்.



### பிரம்மா

பிரபஞ்சத்தின் படைப்பாளி பிரம்மா என்பது இந்துக்களின் நம்பிக்கையாகும். அவரின் நான்கு கைகளும் உலகின் நான்கு திசைகளை பிரதிபலிக்கின்றன. இவர் நான்கு முகங்களைக் கொண்டதனால் ஒரே நேரத்தில் நான்கு திசைகளையும் இவரால் அவதானிக்க முடியும். ஆகவே எங்கும் எப்பொழுதும் எவ்விடத்திலும் அவரால் இருக்க முடியும் என்பதே இதன் உட்பொருளாகும்.



### சிவன்

மனிதர்களின் நன்மைக்காக அழிக்கும் தொழிலை செய்யும் கடவுளாக சிவன் கருதப்படுகின்றார். பல ஜென்மங்களைக் கொண்ட மனித வாழ்க்கையை ஆரம்பித்து வைப்பவரும், முடித்து வைப்பவரும் இவரே என்பதால் இவர் முழுமுதல் கடவுளாகக் கருதப்படுகின்றார்.



### விஷ்ணு

பூமிக்கு ஏற்படும் பாதிப்புகளை தடுத்துக் காக்கும் கடவுளாக விஷ்ணுவை இந்துக்கள் நம்புகின்றனர். தீய சக்தியினையும் நல்ல சக்தியினையும் சமப்படுத்துவதே இவரின் பணியாகும். இதற்காக இவர் மனிதன், விலங்குகள் என ஒன்பது அவதாரங்களின் மூலம் உலகை காப்பதாக நம்பப்படுகின்றது.





### இந்துக்களின் ஏனைய கடவுள்கள்

மும்மூர்த்திகளைத் தவிர இந்துக்கள் மேலும் பல கடவுள்களை வழிபடுகின்றனர். அவற்றுள் வெற்றிக்குரிய கடவுளாக ஆஞ்சநேயரையும், அழகுக்கும் செல்வத்திற்கும் உரிய கடவுளாக லஷ்மி தேவியையும், கலைக்கு சரஸ்வதி தேவியையும் இந்துக்கள் வழிபடுகின்றார்கள். இவ்வாறே, ஞானத்திற்கும், பலத்திற்கும் அதிபதிக் கடவுளாக விநாயகர் பல ரூபங்களில் காணப்படுகின்றார். இவர் சிவன் மற்றும் பார்வதியின் புதல்வராவர்.



### இந்துக்களின் வர்ண பேதம்

இந்து சமூகம் நான்கு வர்ண பேதங்களைக் கொண்டது.
பிராமணர்-பூசகர்கள்
சத்திரியர்-ஆட்சியாளர்கள், படையினர்
வைஷ்யர்- வணிகர்கள் விவசாயிகள்
சூத்திரர்கள்- சேவகர்கள்
இவை தவிர வேறு பல பிரிவுகளும் இந்துக்கள் மத்தியில் காணப்படுகின்றன. பண்டைய காலங்களில் இந்துக்கள் வர்ண வேறுபாடுகளை கண்டிப்பாகக் கடைப்பிடித்தனர் ஆனால் தற்போது இந்த நடைமுறை வழக்கில் இல்லை.


## இந்துக்களின் பண்டிகைகள்

வருடம் முழுவதும் கடவுள் வழிபாடுகளுடன் இந்துக்கள் பண்டிகைகளைக் கொண்டாடுகின்றனர். இதன்போது உறவினர்கள், அயலவர்கள் ஆகியோருக்கு இனிப்புப் பண்டங்களை வழங்கி, ஆலயம் சென்று தமது மத வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர்.

### ஹோலி

ஹோலிக்கா என்ற இராட்சசியிடமிருந்து கிருஷ்ணர் மக்களைக் காப்பாற்றியதனை நினைவுகூரும் முகமாக, இரண்டு நாட்கள் ஹோலி பண்டிகை நடத்தப்படுகின்றது. இப்பண்டிகையில் ஆடல், பாடல் மற்றும் ஊர்வலங்கள் நடத்தப்படும். ஹோலி பண்டிகையின் இரண்டாவது நாள் அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த இந்துக்கள் ஒருவருக்கு ஒருவர் நிறங்களைப் பூசி மகிழ்வர். இந்த பண்டிகை வட இந்தியாவிலேயே பெரும்பாலும் கொண்டாடப்படுகின்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றின் அம்சங்களை வழிபட ஆரம்பித்தான். இதனால்
பின்பற்றுபவரின் ஆத்மார்த்த நம்பிக்கையினை
நம், ஏனைய சில மதங்களில் பல கடவுள்களும் உள்ளனர்.
், விதிகள், கட்டுப்பாடுகளுடன் மனிதர்கள் வாழ்ந்து

இஸ்லாம், இந்து, பௌத்தம், யுதர், சிக் என்பனவே இந்த
டு முறைகளும் உள்ளன. இத்தகைய சகல மதங்களும்
 மதங்களைப் பற்றிய விபரங்களை தொடர்ச்சியாக
 விபரங்களை இவ்வாரம் பார்ப்போம்.



## புனித நூல்கள்

இந்து மதத்தினை தெளிவுபடுத்தி, மனிதன் வாழ வேண்டிய வழிமுறைகளை தெளிவுபடுத்தும் பல புனித நூல்கள் இந்து மதத்தில் உள்ளன. இவற்றுள் மிகவும் பழமையான நான்கு வேத நூல்களாக ரிக், யசுர், சாமம், அதர்வம் என்பன குறிப்பிடத்தக்கது. இதில் தெய்வங்களுக்குரிய ஸ்தோத்திரங்களும் பூஜை முறைகளும், வழிபாட்டு அம்சங்களும் உள்ளன. உபநிடதங்கள் எனப்படும் பூசகர்களுக்கான வழிபாட்டு விதிகளும் இதில் அடங்கியுள்ளன.

## ரிக் வேதம்

மிகப் பழமை வாய்ந்த வேதமாக இது கருதப்படுகின்றது. இதில் இந்து மதத்தின் முக்கியமான 33 கடவுள்களை வர்ணிக்கும் 1000 ஸ்லோகங்கள் அடங்கியுள்ளன. இந்த வேதம் கி.பி 1200 இல் உருவானது. இந்த வேத ஸ்லோகங்கள் வாய்வழியாக சந்ததிகளுக்கு கடத்தப்பட்டு பின்னர் கி.பி.1400 இல் ஆவணப்படுத்தப்பட்டது.

## ஆலயம்

இந்துக்கள் புனிதமான
ாட்களிலும், பண்டிகை
ாட்களிலும் ஆலய வழிபாடுகளை
மற்கொள்கின்றனர். இத்தகைய
ூலயங்கள் மிக மிகப் புனிதமான
டமாகவும், வழிபாட்டுக்குரிய
ூலயங்களில் கடவுள்
ஆராதனைகளைச் செய்வார்.
ன சொற்பொழிவுகள்
ம்பெறும்.


## வழிபாடு

கடவுள் வீற்றிருக்கும்இடத்தில் வழிபாடு செய்வதனால் கடவுளின் அருள் கிடைக்கும் என்று இந்துக்கள் உறுதியாக நம்புகின்றனர். இந்துக்கள் கங்கை நதியினை புனிதமான இடமாகக் கருதுகின்றனர். 'காசி' நகரும் இந்துக்களின் மிகவும் புனிதமான இடமாகும்.

## வீர மகா காவியம்

மகா காவியங்களாக இரண்டினைக் குறிப்பிடமுடியும். இந்தக் காவியங்களில் கடவுள் பூமிக்கு வந்ததாக கூறப்படுகின்றது. அவற்றுள் நீண்ட காவியமாக மகா பாரதம் கருதப்படுகின்றது. இக்காவியத்தில் லட்சக்கணக்கான கவிதைகளுடன் 'விஷ்ணு' பரமாத்மா கிருஷ்ணராக அவதரித்தாக குறிப்பிடப்படுகின்றது. இதில் பகவத் கீதை எனப்படும் கடவுள்களின் கருத்துக்கள் அடங்கியுள்ளன. இவ்வாறே, இராமாயணத்தில் விஷ்ணு இராமரின் அவதாரமாக குறிப்பிடப்படுகின்றது.

## புனித கோமாதா




இந்துக்களின் புனிதமான விலங்காக பசு கருதப்படுகின்றது. இதனால் இந்துக்கள் செறிந்து வாழும் இடங்களில் பசுக்கள் சுதந்திரமாக நடமாட இடமளிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக. இந்தியாவில் பசுவை கொல்வது மகா பாவமாகவும் தண்டனைக்குரிய குற்றமாகவும் கருதப்படுகின்றது.

## இல்லங்களில் வழிபாடு



இல்லங்களில் உள்ள பூஜை அறைகளில் தமது இஷ்ட தெய்வங்களுக்கு சிறு விளக்கு ஏற்றி உணவுகள், பழங்கள் படைக்கப்படுவதுடன் பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் சிறியோர் முதல் பெரியோர் வரை தியானம், சுலோகங்கள், தேவாரங்களோடும் இறைவனை வழிபடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-I)

பெயர்: ..............................................

★ கீழ் காணும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.




01. வெற்றிடத்திற்குப் பொருத்தமான உரு எது?



1. 2. 3.

02. கீழுள்ள எண் கோலத்தை இனங்கண்டு இடைவெளியை நிரப்புக.




1. 3 2. 2 3. 6

03. மாலாவைவிட கமலா வேகமாக ஓடுவாள். விமலாவின் வேகம் கமலாவின் வேகத்தைவிட அதிகம். மாலாவைவிட லதா வேகமாக ஓடினாலும், கலாவைவிட குறைவான வேகத்திலேயே ஓடுவாள். மிகவும் கூடிய வேகத்தில் ஓடுபவர் யார்?

1. விமலா 2. கமலா 3. லதா

04. 16 ÷ [2 x 2] = 4 கூட்டிற்குள் உள்ள எண்ணிற்குப் பொருத்த மான எண் யாது?

1. 5-3 2. 8-2 3. 12-8

05. 0.75 ஐ நிழற்றியுள்ள திண்ம உரு;



1. 2. 3.

06. XV - IV = [ ] என்பதன் பெறுமானம் யாது?

1. XI 2. IX 3. XIII

07. ஒரு நகரத்தின் பாடசாலையானது, வைத்தியசாலையிலிருந்து 40m கிழக்கேயும் பொலிஸ் நிலையமானது, வைத்தியசாலை யிலிருந்து 50m தெற்கேயும் பொலிஸ் நிலையத்திலிருந்து 40m கிழக்கே வங்கியும் உள்ளது. இதற்கேற்ப, வங்கி இருப்பது பாடசாலையிலிருந்து;

1. 50m வடக்கே 2. 50m தெற்கே
3. 40m கிழக்கே


08. பி.ப.12:50 இற்குப் புகையிரத நிலையத்தை வந்தடைய வேண்டிய புகையிரதம், 20 நிமிடங்கள் பிந்தி வருவதாக அறிவிக்கப்பட்டது. அவ்வாறெனின், இப்புகையிரதம் வந்தடையும் நேரம் யாது?

1. 13:20 மணி 2. 12:40 மணி
3. 13:10 மணி

09. கிணறு ஒன்றை வெட்டுவதற்கு 4 மனிதர்களுக்கு 6 நாட்கள் தேவைப்பட்டன. இதே கிணறை வெட்டுவதற்கு 3 மனிதர்களுக்கு தேவைப்படும் நாட்கள் எத்தனை?

1. 8 2. 12 3. 24

10. கீழுள்ள புள்ளிகளை இணைப்பதன்மூலம் பெறக்கூடிய அதிகூடிய செவ்வகங்களது எண்ணிக்கை யாது?



1. 5 2. 4 3. 3

11. குமாரின் அம்மாவிற்கு 2 மகன்களும் 2 மகள்களும் உள்ளனர். குமார் குடும்பத்தில் இளையவன் எனின், குமாரிற்கு எத்தனை சகோதர, சகோதரிகள் உள்ளனர்?

1. 4 2. 3 3. 2

12. கற்றது கை மண்ணளவு என்னும் பழமொழியில் 'கை' என்பதன் கருத்து;

1. கரம் 2. கொஞ்சம் 3. கடல்

13. பின்வருவனவற்றுள் சரியான கருத்தைத் தரும் வாக்கியம் யாது?

1. காகம் பழத்தைக் கடித்து உண்டது
2. மரங்கள் அசைவதால் காற்று வீசுகின்றது
3. மலர்களை தொடுத்தால் மாலை உருவாகும்

(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)

### முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-II)

(ஜூலை 20 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

*01)* 1. தொடர்ந்து பரீட்சையில் தோல்வி அடைந்த வேதனையில்
2. சிலந்தி 3. ஆசிரியர்கள், பெற்றோர்
4. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்/ முயற்சி திருவினையாக்கும்
5. பகுத்தறிவு 6. நினைப்பான்

*02)* 1. ஆசான்/குரு/உபாத்தியாயர் 2. சோதனை/தேர்வு

*03)* 1. மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல
2. சிறகிழந்த பறவை போல

*04)* 1. ஆதியும் அந்தமும் 2. உயர்வு தாழ்வு

*05)* 1. பூச்சாடியை என்னிடம் தாருங்கள்
2. உங்கள் பயிற்சிப் புத்தகத்தை என்னிடம் கொண்டு வாருங்கள்

*06)* 1. அரிசியின் விலை என்ன? 2. இது எனது தலை

*07)* 1. 1 2. 1 3. 2

*08)* 1. ரத்தி 2. மலிபன் 3. அன்கர், நெஸ்பிறே
4. 40 5. 160

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி செய்தியும் கட்டுப்பாட்டு அறையும்

தொலைக்காட்சியைப் பொறுத்தவரையில் செய்தியும் அதில் முக்கியத்துவம் வகிக்கின்றது. ஆரம்ப காலங்களில் செய்திகளை வாசிப்பது மட்டுமே உள்ளடக்கமாக இருந்தது.




இன்றிருப்பதுபோல் செய்திகளுடன் காட்சித் தொகுப்புக்களையும் கலந்து ஒளிபரப்பும் தன்மை அக்காலங்களில் இருக்கவில்லை. அந்தளவிற்கு தொழில்நுட்பத்திறன் போதியதாக இல்லாதிருந்தமையே, இதற்கான காரணமாகும்.

காலப்போக்கில்தான் செய்திகளுடன் தொடர்புடைய காட்சிகளும் இணைத்து ஒளிபரப்பாகின. தொலைக்காட்சி செய்தியைப் பொறுத்தளவிலும்கூட செய்திகள் நேரடியாக ஒளிபரப்பாக வேண்டும் என்ற மரபுமுறையே தொடர்ந்தும் பின்பற்றப்பட்டு வருகின்றது. செய்திகளை வாசிப்பதற்கென்று பிரத்தியேகமான செய்தி வாசிப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருப்பர்.

ஆரம்ப காலங்களில் செய்திகளை வாசிப்பவர்களுக்கு செய்திப் பிரதிகள் சில மணித்தியாலங்களுக்கு முன்னரே வழங்கப்பட்டு விடும். ஏனென்றால், அந்த பிரதியாக்கத்தைப் பார்த்து நன்றாக வாசித்து, செய்தியை உள்வாங்கிவிட்டு சீரான முறையில் பிசகாமல் வாசிக்கச் செய்வதற்காகவே இவ்வாறு முன்கூட்டியே செய்திப் பிரதிகள் அறிவிப்பாளரிடம் வழங்கப்பட்டன. அதன்படி, அவர்கள் தம்மை தயார்படுத்திக்கொள்வதற்கு அந்த அவகாசம் பயனுடைய தாக இருந்தது. சில அறிவிப்பாளர்கள் செய்தி ஒளிபரப்பின்போது, பிரதியைப் பார்த்து வாசிப்பதைவிட, மனனம் செய்து வாசிப்பதிலும் தனித்தன்மையை வெளிப்படுத்திய சந்தர்ப்பங்களும் இருந்தன.



வெளிநாடுகளில் செய்திகளை வாசிப்பதற்குப் பதிலாக செய்திகளைக் கூறும் பாணியே பின்பற்றப்பட்டு வருகின்றது. அதாவது, பிரதிவடிவில் செய்தியை வாசிக்காமல் ஒரு கலந்துரையாடல் பாணியில் செய்திகளை அவர்கள் முன்வைப்பதுண்டு. அதுவும்கூட ஒரு புதுவித பாணியாகவே கையாளப்பட்டது.

இவ்வாறிருக்கையில்தான், செய்தி வாசிப்பவர்கள் பிரதியாக்கத்தைப் பார்த்து வாசிப்பதற்குப் பதிலாக கெமராவிற்கு அருகே உள்ள ஒரு திரையில் செய்திப் பிரதி எழுத்தோட்டமாக காட்டப்பட்டு அறிவிப்பாளர் அந்த திரையைப் பார்த்து

ஊடக பாடநெறி
பாடம் – 114

வாசிக்கும் நவீன முறை வழக்கிற்கு வந்தது. அதாவது, தொலைக்காட்சியில் செய்தியறிக்கையைப் பார்க்கும்பொழுது எதையுமே பார்த்து வாசிக்காமல் மனனம் செய்து அச்சொட்டாக வாசிப்பதுபோல் நேயர்களுக்குத் தோன்றும். ஆனால், உண்மை அதுவல்ல. அறிவிப்பாளருக்கு எதிரே உள்ள திரையில் ஓடும் எழுத்தோட்டங்களைப் பார்த்தே இவர்கள் செய்திகளை வாசிப்பார்கள். இந்த எழுத்தோட்ட திரைக்கு அருகிலேயே கெமராவும் இருப்பதனால், கெமராவைப் பார்த்து செய்தியை வாசிப்பதுபோல் பார்வையாளர்களுக்குத் தோன்றும். இதேவேளை, தொலைக்காட்சி செய்தியைப் பொறுத்தவரையில் இதற்கும் செய்தியாசிரியர்



ஒருவர் இருப்பார். அத்துடன், ஒன்றிரண்டு கெமராக்களை இயக்கச் செய்து கட்டுப்பாட்டு அறையில் செய்தியை நெறிப்படுத்துனர் அமர்ந்திருப்பார். அவரது வழிகாட்டலின் கீழேயே அறிவிப்பாளர் செய்திகளை வாசிப்பார். தேவைப்படும் இடங்களில் அவசியமான அறிவுறுத்தல்களை, ஆலோசனைகளை கட்டுப்பாட்டு அறையில் இருந்தவாறு அவரே வழங்கிக்கொண்டிருப்பார். இதற்காகவே செய்தி அறிவிப்பாளர் தனது காதில்'இயர்போன்' வடிவிலான ஒரு கருவியை பொருத்தியிருப்பார். கட்டுப்பாட்டு அறையிலிருந்து செய்திக் கட்டுப்பாட்டாளர் வழங்குகின்ற அறிவுறுத்தல்கள் இந்த கருவி வழியே செய்தி வாசிப்பாளரின் காதுகளை எட்டும்.

(தொடரும்) **-ரீஷபன்**

# தபால் துறையில் பணிபுரிந்த குடியரசு தலைவர்கள்

அமெரிக்காவின் *16* ஆவது குடியரசுத் தலைவரான ஆபிரஹாம் லிங்கன், அந்நாட்டின் குடியரசுத் தலைவராகும் முன்னர் தபால்காரராக பணியாற்றியுள்ளார் என்பதை நீங்கள் அறிவீர்களா? ஆபிரஹாம் லிங்கன் தன்னுடைய சொந்த ஊரான நியூசேலம் நகரில் தபால் நிலையம் இல்லாதமையால், அரச காரியாலங்களில் நல்ல தொடர்பைக் கொண்டிருந்ததால் தன்னிடம் வரும் கடிதங்களை தன்னுடைய நீண்ட தொப்பியில் சேகரித்து உரிய நபரிடம் கொண்டு சென்று சேர்ப்பிப்பதை அவர் தனது பணியாகக் கொண்டிருந்தார்.





அமெரிக்காவின் 33 ஆவது குடியரசு தலைவரான ஊரி எஸ்.ட்ரூமன் தபால் நிலைய அதிபராக பணிபுரிந்துள்ளார். அமெரிக்காவின் 33 ஆவது குடியரசுத் தலைவரான ஹாரி எஸ்.ட்ரூமன் மிசௌரியில் உள்ள கிராண்ட்வியூவில் அமைந்துள்ள தபால் நிலையத்திலேயே அதிகாரியாக பணிபுரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தமிழ் சான்றோர்கள்



## சைமன் காசிச்செட்டி

அரசாங்கத்தில் பல உயர் பதவிகளை வகித்த போதும் இலங்கையில் தமிழ் மக்களுக்காகவும் தமிழ் மொழிக்காகவும் சேவையாற்றியவர்தான் சைமன் காசிச்செட்டி ஆவார். இவர் 1807 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 21 ஆம் திகதியன்று கற்பிட்டி நகரில் கவிரியேல் காசிச் செட்டி-மேரி ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்.

இவர் பல மொழிகளில் தேர்ச்சி பெற்று இருந்தமையால் 1824 ஆம் ஆண்டு புத்தளம் நீதிமன்றில் மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றினார். 1838 ஆம் ஆண்டில் கோல்புறுக் சீர்திருத்தத்தின் அடிப்படையில் தேசாதிபதியால் இவர் இலங்கைச் சட்டசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். இதனால், இலங்கை நிருவாக சேவையில் இணைக்கப்பட்ட முதலாவது இலங்கையர் என்ற பெருமையையும் மற்றும் மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்பட்ட முதலாவது இலங்கையர் என்ற பெருமையையும் இவர் பெற்றார்.

இவர் அரசியல் சார்ந்த விடயங்களுடன், தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் பெரிதும் சேவை புரிந்துள்ளார். தமிழ்-வடமொழி அகராதி, ஆங்கில-தமிழ் அகராதி மற்றும் தமிழ்த் தாவரவியல் எனும் நூல்களோடு கத்தோலிக்க தேவாலயங்களின் வளர்ச்சியும் முன்னேற்றமும், ஆகிய நூல்களையும் இவர் வெளியிட்டார். அதுமட்டுமன்றி 'உதயாதித்தன்' எனும் பத்திரிகையை 1841 ஆம் ஆண்டு இவர் ஆரம்பித்து வைத்தார்.

இவர் சைவசமயம் சம்பந்தமான நூலான திருக்கோணேச்சரம் பற்றிக் கூறும் கவிராஜவரோதயரின் புராதனப் பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்ததோடு, திருவாதவூரர் புராணத்தின் ஆறாவது சுருக்கத்தினையும், காசிக் காண்டத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இவ்வாறு பல வழிகளில் தமிழ் அன்னைக்கு தொண்டாற்றிய இவர் 1860 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 5 ஆம் திகதி இயற்கை எய்தினார்.

# ஏன் எப்படி



**கேள்வி:-** பெக்கோ இயந்திரங்களில், சக்கரங்களுக்குப் பதிலாக இரும்பாலான சங்கிலி வளையம் பொருத்தப்பட்டிருப்பது ஏன்?



**பதில்:-** பெரும் பள்ளங்களை அகழுதல், பாரிய மரங்களை வேரோடு பிடுங்கி எடுத்தல் ஆகிய செயற்பாடுகளையே, பெக்கோ இயந்திரங்கள் மேற்கொள்கின்றன. இதன்போது, இரும்புச் சங்கிலி வளையத்திற்கும் தரைக்கும் இடையில் ஏற்படும் உராய்வினால் பெக்கோ இயந்திரம் தரையுடன் நன்கு பிடித்து நிற்கும். இதனால், பாரிய அழுத்தத்திலிருந்து பெக்கோ இயந்திரம் வழுக்கிச் செல்வதனையும் மண்ணுள் புதையுண்டு போகாமல் தடுப்பதற்கும் இவ்வாறான இரும்புச் சங்கிலி வளையம் பொருத்தப்படுகின்றது.

**கேள்வி:-** நீண்ட காலம் புகைப்பிடிப்பதனால் விரல் முனைகளிலும் பற்களிலும் காவி படிவதுடன் உதடுகளும் கருமையடைகின்றன இது ஏன்?

**பதில்:-** சிகரெட்களில் பல இரசாயனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றில் 'டெனிஸ்' என்பது தார் போன்ற ஒரு கலவையாகும். சிகரட்டினை உறிஞ்சும் போது இந்த தார் கரைந்து வாயினுள் செல்கின்றது. அத்தோடு, சிகரட்டினை விரல்களினால் தொடும் போது, விரல்களிலும் அந்த தார் ஸ்பரிசமாகின்றது. இதனால், விரல்கள், பற்கள் மற்றும் உதடுகளை இத்தார் கலவையே நிற மாற்றமடையச் செய்கின்றது.



**கேள்வி:-** எமது உடல் வியர்க்கும் வேளைகளில் காற்று உடலை ஸ்பரிசிக்கும் போது சுகமாக இருப்பது ஏன்?

**பதில்:-** எமது உடல் வெப்பமடையும் போது, சருமத்திலுள்ள இரத்தக் குழாய்கள் விரிவடைந்து அதிகளவு இரத்த ஓட்டம் ஏற்படுகின்றது. இதனால், இரத்தத்திலுள்ள நீரின் ஒரு பகுதி சருமத்தின் வெளிப்புறத்தில் வியர்வையாக வெளியேறுகின்றது. இதன்போது, உடலினை ஸ்பரிசிக்கும் காற்றினால் இந்த வியர்வை அப்புறப்படுத்தப்படும் வேளைகளில் எமக்கு சுகமாகவும் குளிர்ச்சியாகவும் உள்ளது.



# தெரிந்து கொள்வோம்



★ இலங்கையின் 34 ஆவது பொலிஸ் மா அதிபரின் பெயர் என்ன?

பூஜித ஜயசுந்தர



★ உலகில் மிக நீளமான கப்பல் எது? இது எதற்காக பயன்படுத்தப்படுகின்றது? இதன் அளவுகள் யாது?

'கிஜாரோ வைகிங்' என்ற எண்ணெய் தாங்கிக் கப்பலாகும். இதன் நீளம் 458 மீற்றர், அகலம் 69 மீற்றர்

★ சங்ககாலப் புலவர்கள் பெண்களின் எந்த உறுப்புகளை எவற்றோடு ஒப்பிட்டனர்?

வஞ்சிக்கொடி - இடை
கயல் மீன் - கண்
அன்னம் - நடை



★ சர்வதேச விண்வெளி நிலையமான I.S.S புவியிலிருந்து எவ்வளவு தூரத்தில் விண்வெளியில் நிலைகொண்டிருக்கின்றது?

சுமார் 400 கி.மீற்றர்



★ 'அல்ப்ஸ்' மலையை குடைந்து உருவாக்கப்பட்ட உலகின் மிக நீளமான சுரங்கப்பாதையின் தூரம் என்ன?

57.09 கி.மீற்றர்



★ வங்கத்தின் துயரம் என அழைக்கப்படும் நதியின் பெயர் என்ன?

பிரம்ம புத்ரா நதி

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எயார் அம்ப்ரெல்லா

‘எயார் அம்ப்ரெல்லா’ (Air Umbrella) எனப்படும் இந்தக் குடையினை சீனாவைச் சேர்ந்த ச்சுவான் வேங் என்பவர் உருவாக்கியுள்ளார். தற்போது ஆய்வு மட்டத்தில் உள்ள இந்த



தயாரிப்பு, கைகளில் எடுத்துச் செல்லக் கூடிய டோர்ச் லைட் போன்றது. இந்தக் குடையில் துணி பயன்படுத்தப்படவில்லை. லித்தியம் மின்கலத்தில் இயங்கும் இந்தக் குடையின் உச்சியில் மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது. இந்த மோட்டார் இயங்கும் போது காற்றலைகள் உருவாகின்றன. இந்த காற்றலைகள்



குடை போன்ற வடிவத்தில் தலைக்கு மேல் எழுந்து, மழையில் நனைவதிலிருந்து பாதுகாப்பு தருகின்றன. தலைக்கு மேலாக காற்று வீச்சினை ஏற்படுத்தி மழையை அப்புறப்படுத்துவதே இதன் பணியாகும்.

# எங்கும் எடுத்துச் செல்லக்கூடிய சலவை இயந்திரம்




சவர்க்காரக் கட்டி ஒன்றின் அளவிலான சலவை இயந்திரத்தை நீங்கள் கண்டிருக்கிறீர்களா? இந்த இயந்திரத்தினைப் பயன்படுத்தி வீட்டில் இருந்து வெளியே சென்றாலும் ஆடைகளை சலவை செய்துகொள்ள முடியும். **Lena Solis** என்ற ஜேர்மனி நாட்டு பெண் ஒருவரே இதனை உருவாக்கியுள்ளார். தொழில் நிமித்தம் வீட்டிலிருந்து அடிக்கடி வெளியே செல்ல வேண்டியுள்ளதால், இந்த இயந்திரத்தை இவர் வடிவமைத்துள்ளார். இதற்கு **Dolfi** என்று பெயரிட்டுள்ளார். **Ultrasonic** தொழில்நுட்பத்தின்மூலமே இந்த இயந்திரம் இயங்குகின்றது.





## எப்படி செயல்படுகின்றது?

முதலில் கொள்கலன் ஒன்றில் நீரை நிரப்பி அதில் சலவைத் தூளையும் ஆடைகளையும் இடவேண்டும். பின்னர் Dolfi இயந்திரத்தினை plug செய்து கொள்கலனுக்குள் இடவேண்டும். அப்போது Dolfi இயந்திரம் சாதாரண சலவை இயந்திரமொன்றைப் போன்று தனது பணியை மேற்கொள்ளும். இதற்கு 30 நிமிடங்கள் போதுமானது. அதன் பின்னர் வழமைபோல் ஆடைகளைக் கழுவி உலர்த்திக்கொள்ளலாம்.


உங்கள் அபிமான

தமிழ்Mirror

திங்கள் முதல் வெள்ளிவரை

விலை Rs.10/=

தினசரி தேசிய பத்திரிகையாக வெளிவருகிறது

wijeyanewspapers
helping shape opinions

the SUNDAY TIMES

விஜய்

DailyMirror

தமிழ்Mirror
www.tamilmirror.lk

விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்பல்வகைமை
# BIODIVERSITY

உலகின் இருப்பிற்கு இன்றியமையாத அங்கமாக 'உயிர்ப்பல்வகைமை' (Biodiversity) காணப்படுகின்றது. உலகில் வாழும் மில்லியன் கணக்கான விலங்குகள் மற்றும் தாவரங்கள் இந்த உயிர்ப்பல்வகைமையில் அடங்கும். இது பற்றி உலக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் முகமாக ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையில் 1992ஆம் ஆண்டு உயிர்ப்பல்வகைமை பற்றிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

## உயிர்ப்பல்வகைமை என்பது...

உயிர்ப்பல்வகைமை என்பது, பூமியில் வசிக்கும் பலதரப்பட்ட உயிரினங்களைக் குறிக்கும் சொல்லாகும். இது மூன்று வகைப்படும்.

**01 மரபியற் பல்வகைமை**
குறிப்பிட்டதோர் இனத்தைச் சார்ந்ததாக பலதரப்பட்ட உயிரினங்கள் இருக்கும் நிலையினையே இது குறிக்கின்றது.

**02 இனப் பல்வகைமை**
ஒரு பிரதேசத்தில் வாழும் பலதரப்பட்ட இனங்கள் இதில் அடங்கும்.

**03 சூழல் தொகுதி பல்வகைமை**
குறிப்பிட்டதோர் இடத்தில் உள்ள சூழல் தொகுதிகளில் காணப்படும் வேறுபாடுகளை இது குறிக்கின்றது.

# இலங்கையின் புவியியல் அமைவிடம்

## இலங்கையின் புவியியல் வரலாறு


உலகில் நிலவும் புவியியல் சான்றுகளின்படி, இலங்கையானது, சுமார் 3 பில்லியன் ஆண்டுகளாக உலகில் நிலைத்திருப்பதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, இற்றைக்கு சுமார் 2500 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு காணப்பட்ட டெரோசொயிக் காலப்பகுதி தொடக்கம் ஜுராசிக் காலப்பகுதி வரை இலங்கை கொட்வானா கண்டத்திற்குரியதாக இருந்தது. இற்றைக்கு சுமார் 158 -160 மில்லியனுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் நிலவிய ஜுராசிக் காலப்பகுதியில் இந்து- மடகஸ்கர் நிலத்தகடானது, கிழக்கு ஆபிரிக்காவிலிருந்து பிளவுபட்டது. அதனையடுத்து 84-96 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் டெக்கான் நிலத்தகடு மடகஸ்கரிலிருந்து பிளவுபட்டதன் பின்னர், 40 - 50 மில்லியன் காலப்பகுதியில் அது யுரேசியன் நிலத்தகடுடன் மோதியது. ஆக, இந்தியாவும் இலங்கையும் இவ்வாறுதான் உருவாகின என்று கருதப்படுகின்றது. 20 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவும் இலங்கையும் வெவ்வேறாகப் பிளவுபட்டன.

## இலங்கைக்குரிய நிலப்பகுதியும் கடல் பகுதியும்

இலங்கை தீவானது, உலகின் 25ஆவது பெரிய தீவாகக் கருதப்படுகின்றது. பூமியில் பூமத்திய ரேகைக்கு உட்பட்ட நாடுகளில் இலங்கையும் அடங்குகின்றது. இந்து சமுத்திரத்தின் கேந்திரப் பகுதியில் இலங்கை அமைந்துள்ளது. 1976 இல. 22 என்ற சமுத்திர வலய சட்டம் மற்றும் 1982 இல் ஐக்கிய நாடுகளின் சமுத்திரங்கள் பற்றிய சட்டத்துடன் தொடர்புடைய ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கையின்படி, இலங்கைக்குரிய கடற்பிராந்தியம் பிரித்து வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மொத்தப் பரப்பு<br>சதுர கிலோமீற்றர்<br>**65,610** | கரையோரப் பகுதி<br>கிலோமீற்றர்<br>**1620** |
| நிலப் பரப்பு<br>சதுர கிலோமீற்றர்<br>**64,740** | அகலாங்கு அமைப்பு<br>வட அகலாங்கு<br>**5° 55' - 9° 51'** |
| நீர்ப் பரப்பு<br>சதுர கிலோமீற்றர்<br>**870** | நெட்டாங்கு அமைப்பு<br>கிழக்கு நெட்டாங்கு<br>**79° 41' - 81° 54'** |


ஜுராசிக் காலத்திற்கு முன்னர்


ஜுராசிக் காலத்திற்குப் பின்னர்







## இலங்கையின் பல்வகைமைக் காலநிலை வலயங்கள்

இலங்கையில் நிலவும் உயிர்ப்பல்வகைமை மற்றும் காலநிலையின் அடிப்படையில், ஆறு பல்வகைமைக் காலநிலை வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன வறள் வலயம், உலர் வலயம், இடை வலயம், ஈர வலயம், மலைநாட்டு இடை வலயம், மலைநாட்டு ஈர வலயம் என்பனவாகும். பின்னர் 1999ஆம் ஆண்டு வனவள மற்றும் சுற்றாடல் அமைச்சினால் இலங்கை 15 உயிர்ப்பல்வகைமைப் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டது. இதில் காலநிலை மற்றும் பௌதிக வகைப்பாடு, விலங்குகள் மற்றும் தாவரங்கள் பரவலாக உள்ள விதம் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவும் உயிர்ப்பல்வகைமை விபரங்கள் உள்ளடங்கியுள்ளன.



இல…
இலங்கை…
அமைவிடங்கள…
நில வரைபடத்…
கடல் மட்ட…
மீற்றர் வ…
வ…

## இலங்கையின் சுற்றாடல் தொ…

இலங்கையில் இனங்காணப்பட்டுள்…
பரவல், நிலத்தின் பௌதிக மற்றும்…
அமைவிடங்களை பிரதிபலிக்கும் வ…
சுற்றாடல் தொகுதிகளைக் காணலா…


ஈர வலய என்றும் பசுமையான காடுகள்


உலர் கலந்த என்றும் பசுமையான காடுகள்


நீர்த்தேக்கம்


ஆறு மற்றும் நீரோடை


கற்களால் உ…
சிறிய …

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலங்கையின் நில வரைபடம்

இலங்கையின் பௌதிக மற்றும் இயற்கை அமைவிடங்களை சுட்டிக்காட்டுவதற்காக, இந்த நில வரைபடத்தினை உருவாக்கியுள்ளனர். இது கடல் மட்டத்திலிருந்து 0 மீற்றர் முதல் 300 மீற்றர் வரையும், 300 முதல் 1500 மீற்றர் வரையும், 1500இற்கு மேற்பட்டது என்ற அடிப்படையிலும் வகைப் படுத்தப்பட்டுள்ளது.

## இலங்கையின் ஆறுகளும் நீர்த்தேக்கங்களும்

இலங்கை முழுவதும் ஆறுகளைக் காண முடியும். இலங்கையில் இயற்கையாக உருவான ஏரிகள் இல்லை. எனினும், விவசாயத்திற்குப்பயன்படும் வகையில் மனிதனால் உருவாக்கப்பட்ட வாவிகளையும் நீர்த்தேக்கங்களையும் காணலாம்.

உலகில் சிறந்த உயிர்ப்பல்வகைமை நிலவும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்




## உலக உயிர்ப்பல்வகைமையில் சிறந்த மற்றும் அச்சுறுத்தல் நிலவும் பிரதேசங்கள்

1. மேற்கு ஆபிரிக்காவின் கினியன் காடு 2. சதைப்பற்றுள்ள தாவர பீடபூமி 3. கிழக்கு ஆபிரிக்க கரையோரக் காடுகள் 4. கிழக்கு ஆபிரிக்க மலைத்தொடர் 5. ஆபிரிக்காவின் கொம்பு 6. மடகஸ்கர் மற்றும் இந்து சமுத்திரத் தீவுகள் 7. மெப்புட்டலண்ட் பொன்டோலண்ட் - அல்பேனி 8. கேப் தாவர பிராந்தியம் 9. கிழக்கு மெலனேசிய தீவுகள் 10. கிழக்கு அவுஸ்திரேலியக் காடுகள் 11. இமயமலை 12. இந்து - பர்மா 13. ஜப்பான் 14. தென்மேற்கு சீன மலைத்தொடர் 15. நியூ கெலிடோனியா 16. நியூஸிலாந்து 17. பிலிப்பைன்ஸ் 18. பொலினீசியா - மைக்ரோனீசியா 19. தென்மேற்கு அவுஸ்திரேலியா 20. சண்டலண்ட் 21. வொலேசியா 22. மேற்கு காட்ஸ் மற்றும் இலங்கை 23. கொகேசஸ் 24. இரானோ- எனடோலியன் 25. மத்தியதரைக்கடல் வடிநிலம் 26. மத்திய ஆசிய மலைத்தொடர் 27. டும்பஸ் - சோகோ மக்டலேனா 28. வெப்பமண்டல அந்தீஸ் 29. சிலியன் வின்டர் ரெய்ன்ஃபோல் மற்றும் வோல்டிவியன் வனம் 30. செர்ராடோ 31. அட்லாண்டிக் வனம் 32. மெசோஅமெரிக்கா 33. மெட்ரியன் பைன்-ஓக் வனப்பகுதி 34. கரீபியன் தீவுகள் 35. கெலிஃபோர்னியா தாவரப் பகுதி

Convention on Biological Diversity

## உயிர்ப்பல்வகைமை உடன்படிக்கை

1992ஆம் ஆண்டு பிரேசிலின் ரியோ டி ஜெனைரோ நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் புவி மாநாட்டில் பங்குபற்றிய அதன் அங்கத்துவ நாடுகளுக்குரிய தலைவர்களின் தலைமையில் 'சுற்றாடலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம்' என்பதை வலியுறுத்தும் வகையில் இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.




## இலங்கையும் உயிர்ப்பல்வகைமை உடன்படிக்கையும்

1992ஆம் ஆண்டு முதல் இலங்கையும் உயிர்ப் பல்வகைமை பற்றிய சர்வதேச உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. 1994ஆம் ஆண்டு இந்த உடன்படிக்கை அமுலானது. இதன் பின்னர் இலங்கைக்கான திட்டமிடல்கள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக, இலங்கையில் எந்தெந்த விடயங்கள் முன்னேற்றப்பட வேண்டும் என்பது குறித்து ஆராயப்பட்டது.

### 1996

உயிர்ப்பல்வகைமை பற்றிய சர்வதேச உடன்படிக்கையின்படி, இலங்கையின் உயிர்ப்பல்வகைமை பாதுகாப்பின்கீழ், உயிர்ப்பல்வகைமை பாதுகாப்பு அமுலாக்கல் திட்டமொன்று (Biodiversity Conservation Action Plan) தயாரிக்கப்பட்டது.

### 1998

இந்த உயிர்ப்பல்வகைமை பாதுகாப்பு செயல்திட்டத்தின்கீழ் உயிர்ப்பல்வகைமை செயலகம் ஒன்றும் நிறுவப்பட்டது. இதனை அமுல்படுத்தவென தேசிய குழு ஒன்றும் செயலணியும் அமைக்கப்பட்டன.

## திட்டத்தின்கீழ் அமுலாக்கப்படும் விடயங்கள்

**A** உயிர்ப்பல்வகைமை பாதுகாப்பு செயல்திட்டத்தின்கீழ் அமுல் படுத்தப்படவுள்ள பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை ஆராய்தல்.

**B** இந்த பரிந்துரைகள் தொடர்பான நிகழ்கால செயற்பாடுகளை மதிப்பிடல்.

**C** அமுல்படுத்துவதற்கு முக்கியத்துவமளிக்கப்பட வேண்டிய விடயங்களை இனங்கண்டு அவற்றை அமுலாக்க தேவையான பொறுப்புகளை வழங்குதல்.

**D** குறித்த விடயம் தொடர்பில் தேசிய நடவடிக்கை குழுவுக்கு நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்குதல்.

**E** இனங்காணப்பட்ட விடயங்கள் தொடர்பில் நிபுணர்களினால் உருவாக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் பரிந்துரைகளை நன்கு ஆராய்தல்.

**F** அமுலாக்கப்படும் விடயங்களை அடிக்கடி கண்காணித்தல் மற்றும் ஆராய்தல்.

**G** தேசிய நடவடிக்கை குழுவினால் பிரதானமாக சுட்டிக்காட்டப்படும் செயற்பாடுகளை அமுல்படுத்துதல்.

2011-2020 United Nations Decade on Biodiversity

## ஐக்கிய நாடுகளின் உயிர்ப்பல்வகைமை தசாப்தம்

2010 ஆம் ஆண்டு ஜப்பானின் அய்ச்சி பிராந்தியத்தில் நடைபெற்ற COP 10 ஆவது மாநாட்டில் முன்வைக்கப்பட்ட உத்தேச யோசனைகளின் அடிப்படையில், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையினால் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதி ஐக்கிய நாடுகள் சபையின் உயிர்ப்பல்வகைமை தசாப்தமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இங்கு பிரதானமாக உயிர்ப்பல்வகைமையினைப் பாதுகாப்பதற்கான திட்ட வரைபுகளைத் தயாரித்தல், இலக்குகளை அடைவதற்கான ஒத்துழைப்பு மற்றும் அறிவினை வழங்குதல், உயிர்ப்பல்வகைமையினைப் பாதுகாப்பது பற்றி மக்களை அறிவுறுத்தல் மற்றும் கவனத்தினை ஈர்த்தல் என்பன பற்றி கவனம் செலுத்தப்படுகின்றது. ஜப்பானின் கனசாவா நகரில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

## ...ன் சுற்றாடல் தொகுதி பல்வகைமை

...இனங்காணப்பட்டுள்ள உயிரினங்களின் ...ன் பௌதிக மற்றும் இயற்கை ...ளை பிரதிபலிக்கும் வகையில் பல்வேறு ...குதிகளைக் காணலாம்.



கற்களால் உருவான சிறிய தீவு



கற்பாறைகளைக் கொண்ட கடற்கரை



பவளப்பாறை



விவசாய நிலம்




நிலக்கீழ் குகை



மலைநாட்டு சமவெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





2012 லண்டன் ஒலிம்பிக் ஆரம்ப விழாவின்போதான ஒரு காட்சியே இது. லண்டன் ஒலிம்பிக் மைதானத்தில் சேர். டிம் பேர்னர்ஸ்-லீ யை கௌரவிக்கும் முகமாக, அவரது முதலாவது தகவலான 'THIS IS FOR EVERYONE' என்ற வாசகம் எல்சிடி திரையில் காண்பிக்கப்பட்டது.

# WWW இனை அறிமுகப்படுத்திய சேர். டிம் பேர்னர்ஸ் - லீ

கடந்த நூற்றாண்டுகளில் வாழ்ந்த விஞ்ஞானிகள் பலருக்கு, தமது கண்டுபிடிப்புகளினால் உலகம் பயன்பெறும் விதத்தைக் கண்டுகொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கவில்லை. இதற்குக் காரணம், அவர்களின் கண்டுபிடிப்புகள் அங்கீகரிக்கப்படுவதற்கு அல்லது பயன்பாட்டுக்கு உட்படுவதற்கு மிக நீண்ட காலம் எடுத்தமையாகும். எனினும், தமது கண்டுபிடிப்பினால் உலகம் பயன்பெறும் விதத்தைக் காணும் அதிர்ஷ்டத்தைப் பெற்ற விஞ்ஞானிகளில் ஒருவர்தான் சேர்.டிம் பேர்னர்ஸ்-லீ ஆவார்.

சுமார் 27 ஆண்டுகளுக்கு முன்னர் சேர். டிம் பேர்னர்ஸ்-லீ முன்வைத்த புதிய படைப்பு, இன்று உலகம் முழுவதும் புரட்சிகர மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. தேச எல்லைகளைக் கடந்து ஒவ்வொரு மனித வாழ்க்கையிலும் செல்வாக்குச் செலுத்தும் தன்மையினையும் அது அடைந்துள்ளது. டிம் பேர்னர்ஸ்-லீயின் அந்த புதிய படைப்புத்தான் 'வேர்ல்ட் வைட் வெப்' (World Wide Web- WWW) எனும் 'உலகளாவிய வலை' ஆகும். இன்றும் கூட அவர் தனது படைப்பின் சிறப்புகளை அவதானித்து வருவதுடன், அதனை மென்மேலும் விருத்தி செய்யும் பணிகளிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றார்.




சேர். டிம் பேர்னர்ஸ்-லீ அன்று World Wide Web' இன் முன்னேற்ற நிலை குறித்து தெளிவுபடுத்திய நிகழ்வொன்றின்போது... பின்னணியில் அவரது விளக்க வரைபுகளைக் காணலாம்.

## WWW அறிமுகம்

1955 ஆம் ஆண்டு ஜூன் 8 ஆம் திகதி லண்டனில் பிறந்த டிம் பேர்னர்ஸ் -லீ, பௌதிகவியல் விஞ்ஞானியாகவும் கணினி அறிவியலாளராகவும் திகழ்கின்றார். 27 ஆண்டுகளுக்கு முன்னர் சேர். டிம் பேர்னர்ஸ்-லீ, சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் அமைந்துள்ள ஐரோப்பிய அணு ஆராய்ச்சி நிலையத்தில் (European Organization for Nuclear Research - CERN) பணியாற்றிக் கொண்டிருக்கும்போதே, அவரின் இந்த அரிய கண்டுபிடிப்பு நிகழ்ந்தது. இங்கு பணியாற்றும் போது, தனது நண்பர்களுடன் தொடர்பினைப் பேணுவதற்காக ஒரு வழிமுறை அவருக்குத் தேவைப்பட்டது. அதன் விளைவாகவே, 'World Wide Web' எனும் உலகளாவிய வலை தோற்றம் பெற்றது. அதற்கமைய, 1989 மார்ச் மாதத்தில்தான் அவர் www என்ற சொல்லைப் பயன்படுத்தும் யோசனையை முதன்முதலில் முன்வைத்தார். இது குறித்த செயற்றிட்டத்தினை விளக்கும் போது, "www செயற்றிட்டத்தின் நோக்கம் அனைத்து தகவல்களையும் செய்திகளையும் எந்தவோர் இடத்திற்கும் கொண்டு செல்வதாகும்" என்றார்.

பின்னர் அது நேரடியாக இணையும்போது, "இந்த வலைத்தள (Website) விஸ்தரிப்பினை வேறு பகுதிகளுக்கும் மேற்கொள்ள நாம் அக்கறை கொண்டுள்ளோம். இதனூடாக, பிற தரவுகள் மற்றும் தகவல் சேவைகளுக்கும் இடமளிக்க நாம் எண்ணியுள்ளோம். இதற்கு ஒத்துழைப்பு வழங்க முன்வருவோரை நாம் மனம் உவந்து வரவேற்கின்றோம்" என சேர். டிம் பேர்னர்ஸ் - லீ தெரிவித்தார்.


### World Wide Web

The WorldWideWeb (W3) is a wide-area hypermedia information retrieval initiative aiming to give universal access to a large universe of documents.

Everything there is online about W3 is linked directly or indirectly to this document, including an executive summary of the project, Mailing lists , Policy , November's W3 news , Frequently Asked Questions .

What's out there?
    Pointers to the world's online information, subjects , W3 servers, etc.
Help
    on the browser you are using
Software Products
    A list of W3 project components and their current state. (e.g. Line Mode ,X11 Viola , NeXTStep , Servers , Tools , Mail robot , Library )
Technical
    Details of protocols, formats, program internals etc
Bibliography
    Paper documentation on W3 and references.
People
    A list of some people involved in the project.
History
    A summary of the history of the project.
How can I help ?
    If you would like to support the web..
Getting code
    Getting the code by anonymous FTP , etc.

சேர்.டிம் பேர்னர்ஸ்-லீ தயாரித்த முதலாவது வலைப்பக்கம்.



ஸ்டீவ் ஜொப்ஸ்ஸின் NeXT கணினிதான் உலகின் முதலாவது இணையத் தேடல் சாதனமாகும். சேர்.டிம் பேர்னர்ஸ்-லீ பாவனைக்குட்படுத்திய NeXT கணினியே இது.






சேர். டிம் பேர்னர்ஸ்-லீ (2014)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் வளத்தைப் பாதுகாத்து, பயிர்களின் வளர்ச்சிக்கு உதவும்

## மண்புழு உரம்





நிலத்தை மாசடையச் செய்யாது, மண் வளத்தை அதிகரிக்கும் தன்மை கொண்டவையாக மண் புழுக்கள் உள்ளன. எனவேதான், விவசாயிகளின் நண்பனாக மண்புழு கூறப்படுகின்றது. உலகில் 3000 வகையான மண்புழுக்கள் கண்டறியப் பட்டுள்ளன. இவற்றில், சில வகையான மண் புழுக்கள் உரம் தயாரிக்க உகந்தவை. மண்புழுக்கள், இயற்கையில் கிடைக்கும் விவசாயக் கழிவுப் பொருள்களான சாணம், இலை, தழை போன்றவற்றை உட்கொண்டு, சிறு சிறு உருண்டைகளாக வெளியேற்றும் எச்சங்களையே 'மண்புழு உரம்' (Vermicompost) என்கின் றனர். மண்புழு உரம் உற்பத்தி யாவதற்கு 45-60 நாட்கள் எடுக்கின்றன.





விளைநிலங்களுக்குப் பயன்படுத்தப்படும் மண் புழு உரங்களில், நைதரசனை நிலை நிறுத்தும் பெக்டீரியாக்கள், பொஸ்பேட்டை கரைக்கக் கூடிய பெக்டீரியாக்கள், இரும்பு, துத்தநாகம், மெக்னீசியம் போன்ற நுண்ணூட்டச் சத்துக்கள், ஹோர்மோன் மற்றும் விற்றமின்கள் போன் றவை அதிக அளவில் உள்ளன. ரசாயன உரங்களைத் தேவைக்கு அதிகமாகப் பயன்படுத்துவதால், மண்ணின் இயற்கைத் தன்மை கெட்டுவிடுகிறது. ஆனால், மண்புழு உரத்தை மண்ணில் இடுவ தால் மண் வளம் இயற்கை யாகப் பாதுகாக்கப்பட்டு, பயிர்களுக்கு வளர்ச்சி ஊக்கி யாகவும் செயல்படுகிறது.

மண்புழு உரமானது, பயிர்களுக்கு நல்ல ஊட்டச் சத்துக்களையும் வளர்ச்சி ஊக்கிகளையும் அளிப்பதாக கூறப்படுகிறது. தானியங் கள், பழங்கள், மலர்கள் மற்றும் காய்கறி வளர்ப்பில் மண்புழு உரம் உபயோகித் தால், அவற்றின் வைப்புத் திறன் அதிகரிக்கின்றது. அத்துடன், மண்புழு உர மிட்டு வளர்க்கப்படும் பழங் களின் நிறம், சுவை, மணம் போன்றவையும் அதிகரிக்கப் படுகின்றது. பூச்சி நோய்த் தாக்கத்தை வெகுவாகக் குறைக்கவும் மண்புழு உரம் உதவுகின்றது. மேலும் நச்சுத் தன்மை இல்லாத உணவை உற்பத்தி செய்ய மண்புழு உரம் மிகவும் உகந்தது எனக் கூறப்படுகின்றது.

## குமுதம்

- ★ தாவரவியல் பெயர் : *Nymphoides hydrophylla*
- ★ ஆங்கிலப் பெயர்: Crested floatingheart, white water snowflake
- ★ சிங்களப் பெயர்: குமுது மல

வெப்பமண்டல ஆசிய நாடுகளில் இதனைக் காணலாம். Menyanthaceae தாவர குடும்பத் திற்குரிய ஒரு நீர்த் தாவரமாகவே குமுதம் கருதப்படுகின்றது. இதில் வெண்ணிறப் பூக்கள் பூக்கும். மிதக்கும் இலைகளைக் காண முடியும். இதன் மெல்லிய தண்டுகள் உணவாக பயன்படுகின்றன. அலங்கார வளர்ப்புத் தாவரமாகவும் குமுதம் பயன்படுகின்றது. வாவிகள் மற்றும் அதனை சார்ந்த நீர்நிலைகளில் வளரும். நீரின் அடியில் கடும்பச்சை இலைகளையும் பிரகாசமான பச்சை நிறத்திலான இலைகளையும் காணலாம்.



## தொட்டிகளில் மட்டும் குப்பைகளை இடுவோம்




குப்பைகளை சரியான முறையில் அப்புறப்படுத்து வதனால் மீள்சுழற்சி செயற்பாட்டினை இலகுவாக மேற்கொள்ள முடியும். எனவே, குப்பைகளை தொட் டிகளில் மட்டும் இடுமாறு மத்திய சுற்றாடல் அதிகாரசபை பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. குப்பைகளைக் கொட்டும்போது, பின்பற்றும் தவறான நடைமுறைகளை தவிர்த்து, சுற்றாடலுக்கு ஏற்பு டைய நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவசியம்.

இதன் ஒரு நடவடிக்கையாக மத்திய சுற்றாடல் அதிகாரசபைச் செயற்றிட்டத்தின்மூலம் 300 புகையிரத நிலையங்களில் குப்பைகளை இடுவதற்காக தொட்டிகள் வழங்கப்பட்டுள் ளன. எனவே, புகையிரதங்களில் பயணிக்கும்போது குப்பைகளாக எறியப் படும் பொலித்தீன் கள், பிளாஸ்டிக் போன்ற கழிவுகள் மற்றும் உணவுகளை சரியான முறை யில் அகற்று மாறு மத்திய சுற்றாடல் அதிகாரசபை பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන்
ஆயுபோவன்
**வணக்கம்**

**இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகனுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

පුතා: අම්මේ! අද රෑ කෑමට මොනවද තියෙන්නේ?
அம்மே! அத ரே கேமட்ட மொனவத தியென்னே?
**மகன்: அம்மா! இன்று இரவு உணவுக்கு என்ன இருக்கிறது?**

අම්මා: ඉදිආප්ප තියෙනවා පුතේ.
இதிஆப்ப தியெனவா புதே.
**அம்மா: இடியப்பம் இருக்கிறது மகன்.**

පුතා: ඉදිආප්ප කොහෙන් ද අම්මේ?
இதிஆப்ப கொஹென் த அம்மே?
**மகன்: இடியப்பம் எங்கிருந்து அம்மா?**

අම්මා: නැන්දා එවලා තිබුණා.
நெந்தா எவலா திபுணா.
**அம்மா: மாமி அனுப்பி இருந்தார்.**

පුතා: ඉදිආප්ප කන්න මොනවද තියෙන්නේ?
இதிஆப்ப கன்ன மொனவத தியென்னே?
**மகன்: இடியப்பம் சாப்பிட என்ன இருக்கிறது?**

අම්මා: කුකුල් මස් කරි තියෙනවා. පොල් සම්බෝල තියෙනවා.
குகுல் மஸ் கறி தியெனவா. பொல் சம்போல தியெனவா.
**அம்மா: கோழி இறைச்சிக் கறி இருக்கிறது.
தேங்காய் சம்பல் இருக்கிறது.**

පුතා: පරිප්පු නැද්ද අම්මේ?
பரிப்பு நெத்த அம்மே?
**மகன்: பருப்பு இல்லையா அம்மா?**

අම්මා: තියෙනවා පුතේ. ඔයා පරිප්පු කන්න ආස නිසා මම හැදුවා.
தியெனவா புதே. ஒயா பரிப்பு கன்ன ஆச நிசா மம ஹெதுவா.
**அம்மா: இருக்கிறது மகன். நீங்கள் பருப்பு சாப்பிட விருப்பம் என்பதால் நான் சமைத்தேன்.**

පුතා: අම්මේ, තාත්තා මස් කන්නේ නැහැනේ.
அம்மே, தாத்தா மஸ் கன்னே நெஹெனே.
**மகன்: அம்மா, அப்பா இறைச்சி சாப்பிட மாட்டாரே.**

අම්මා: මම තාත්තාට මාලු කරියක් හැදුවා.
மம தாத்தாட்ட மாலு கறியக் ஹெதுவா.
**அம்மா: நான் அப்பாவுக்கு மீன் கறி சமைத்தேன்.**



**பயிற்சி**

**இடைவெளிகளை நிரப்புக.**

1. .................. තියෙනවා පුතේ.
2. ............. එවලා තිබුණා.
3. කුකුල් ................ තියෙනවා.




## தன் கூற்று வாக்கியம் - பிறர் கூற்று வாக்கியம்
## Direct speech & Indirect speech

★ **தன் கூற்று வாக்கியங்களை பிறர் கூற்று வாக்கியங்களாக மாற்றியமைக்கும் முறை பற்றி முன்னைய பாடங்களில் கற்றோம் அல்லவா? அவையாவும், 'கட்டளை' வாக்கியங்கள் மற்றும்'வேண்டுகோள்' வாக்கியங்கள் என்பதை நாம் ஞாபகத்தில்கொள்ள வேண்டும்.**

★ **இனி, 'உடன்பாடு' வாக்கியங்களை, 'தன் கூற்று' நிலையில் இருந்து, 'பிறர் கூற்று' நிலை வாக்கியங்களாக மாற்றியமைக்கும் முறை பற்றி இங்கே பயில்வோம்.**

அ) Ragavan said, "I am very happy."
ராகவன் கூறினான், "நான் மிக மகிழ்ச்சியாக இருக்கிறேன்" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

**குறிப்பு:** மேற்படி 'தன் கூற்று' வாக்கியத்தை, 'பிறர் கூற்று' வாக்கியமாக மாற்றியமைக்கும்போது, சில மாற்றங்களைச் செய்ய வேண்டியுள்ளது. இது, ஆங்கில மொழி இலக்கண மரபாகும்.

★ **மாற்றத்தின் பின்னர் அவ்வாக்கியம் பின்வருமாறு அமைகின்றது.**

ஆ) Ragavan said that he was very happy.
தான் மிக மகிழ்ச்சியாக இருப்பதாக ராகவன் கூறினான்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

★ **மாற்றங்கள் எவை என்பதை இங்கே அவதானிப்போம்.**

1. பிறர் கூற்று வாக்கியத்தில் 'that' எனும் சொல் மேலதிகமாகக் கையாளப்பட்டுள்ளது. இங்கே, 'that' என்பது இணைக்கும் சொல்லாகப் பயன்பட்டுள்ளது.
2. தன் கூற்று வாக்கியத்தில் காணப்படுகின்ற 'I' எனும் பிரதிப் பெயர்ச்சொல் (pronoun) , பிறர் கூற்று வாக்கியத்தில் 'He' எனும் பிரதிப் பெயர்ச் சொல்லாக மாற்றப்பட்டுள்ளது.
3. தன் கூற்று வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள 'am' எனும் நிகழ்கால வினைச்சொல், பிறர் கூற்று வாக்கியத்தில் 'was' எனும் இறந்தகால வடிவத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.
4. தன் கூற்று வாக்கியத்தில் ராகவன் நேரடியாகக் கூறியதாக அமைந்துள்ள வார்த்தைகள், மேற்கோள் குறிகளுக்குள் ("......") உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆனால், பிறர் கூற்று வாக்கியத்தில் மேற்கோள் குறிகள் தவிர்க்கப்பட்டுள்ளன.
5. தன் கூற்று வாக்கியத்தை எமக்கு அறிமுகப்படுத்துவதற்கு 'said' எனும் வினைச்சொல் கையாளப்படுகின்றது. எனவேதான், இச்சொல், 'அறிமுகம் செய்து வைக்கும் வினைச்சொல்' (Introductory Verb) எனச் சிறப்பித்துக் கூறப்படுகின்றது.

★ **பிறர் கூற்று வாக்கியத்தில் கையாளப்படுகின்ற said, told, asked என்பனவும் அறிமுகம் செய்து வைக்கும் வினைச்சொற்கள் என்றே இலக்கண ரீதியாகக் குறிப்பிடப்படுகின்றன.**

★ **மேலும் ஒரு விளக்கம்: நிகழ்காலத்தில் இருக்கின்ற 'தன் கூற்று' வாக்கியத்தை, 'பிறர் கூற்று' வாக்கியமாக மாற்றுவதற்கு, 'said' எனும் இறந்தகால வினைச்சொல்லை, அறிமுகம் செய்து வைக்கும் வினைச்சொல்லாகக் கையாண்டால், அதன்மூலம் அமைக்கப்படுகின்ற பிறர் கூற்று வாக்கியத்தில், இறந்தகால வடிவத்தில் உள்ள வினைச்சொற்களே இடம்பெற வேண்டும் என்பது பொதுவான ஆங்கிலமொழி இலக்கண விதி ஆகும்.**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகிய பிரிட்டன்

கடந்த ஜூன் மாதம் 23 ஆம் திகதி நிகழ்ந்த மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பின் பிறகு, ஐரோப்பிய யூனியனில் இருந்து விலகுவதற்கு பிரித்தானிய மக்களில் பெரும்பான்மையானோர் தீர்மானித்ததைத் தொடர்ந்து, ஐரோப்பிய சங்கத்திலிருந்து விலகக்கூடாது என தொடர்ச்சியாகக் கூறிவந்த பிரிட்டனின் அப்போதைய பிரதமர் டேவிட் கெமரன் விசேட ஊடக மாநாட்டை நடத்தி தான் பிரதமர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்தார். அதன்படியே, அவரது கட்சியைச் சேர்ந்த தெரேசா மே என்பவர் பிரிட்டனின் புதிய பிரதமராக பதவியேற்றார்.



ஐரோப்பிய யூனியனில் இருந்து பிரிட்டன் விலகக் கூடாது எனக் கூறி, அதற்காக தேர்தல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில் முன்னின்று உழைத்தவர் கெமரன் அவர்களே.

**வாக்குகளை எண்ணும் மத்திய நிலையங்கள் 382**

அவற்றில் 374 இன் முடிவுகள் வெளியிட்ட வேளையில் பிரித்தானியா ஐரோப்பிய யூனியலில் இருந்து விலக வேண்டுமென வாக்களித்தோர் **1,65,27,182** பேராக இருந்தது. இது நூற்றுக்கு **51.7** வீதமாகும்.



பிரதமர் பதவி விலகுவதாக ஆற்றிய உரை




**46.5 மில்லியன்**

கடந்த 23 ஆம் திகதி இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, வேல்ஸ், அயர்லாந்து ஆகிய பிரதேசங்களில் மட்டுமன்றி பிரித்தானியாவின் ஆட்சிக்குட்பட்ட ஸ்பானியாவுக்கும் அப்பால் உள்ள ஜிப்ரோல்டா தீவிலும் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு எடுக்கப்பட்டது. அனைத்து கண்டங்களில் வாழும் பிரித்தானிய பிரஜைகள்கூட இந்த வாக்கெடுப்பில் கலந்துகொண்டனர்.

பிரித்தானியரில் பெரும்பான்மையினர் ஐரோப்பிய யூனியனில் இருந்து விலகத் தீர்மானித்தபொழுதிலும், அந்த விலகல் உடனடியாக அமுலுக்கு வராது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**ஐரோப்பிய யூனியனில் பிரித்தானிய தொடர்ந்து இருக்க வேண்டுமென வாக்களித்தோர் தொகை 1,54,56,908 ஆகும். இது நூற்றுக்கு 48.3 வீதமாகும்.**

இதேவேளை, ஐரோப்பிய சங்கத்தில் தொடர்ந்து இருக்க வேண்டுமென வாக்களித்தோர் தொகை 1,54,56,908 ஆகும். இது நூற்றுக்கு 48.3 வீத மாகும். அதாவது, வெற்றி பெறுவதற்காக ஒரு கோடியே அறுபத்தெட்டு லட்சத்திலும் அதிக வாக்குகளை பெற வேண்டும்.




பெரிய பிரித்தானியா என அழைக்கப்படும் ஐக்கிய இராச்சியமானது, இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, வேல்ஸ், அயர்லாந்து ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய ஒரு நாடாகும். இங்கிலாந்தின் தலைநகர் லண்டன் மக்களில் பெரும்பான்மையானோர் மட்டுமல்ல ஸ்கொட்லாந்து மக்களும் கூட ஐரோப்பா சங்கத்தில் தொடர்ந்து பிரித்தானியா அங்கத்துவம் வகிக்க வேண்டுமென்றே வாக்களித்தனர்.

## 1984




1984 ஆம் ஆண்டு ஐரோப்பா சங்கத்தில் இருந்து விலகிய நாடு கிறீன்லாந்து ஆகும். முன்னர் டென்மார்க்கின் வற்புறுத்தலின் பெயரிலேயே 1973 ஆம் ஆண்டு கிரீன்லாந்து ஐரோப்பிய சங்கத்தில் இணைந்தது. எனினும், 1982 இல் ஐரோப்பிய யூனியனின் பொருளாதார சமூகம் மீன்பிடிக் கைத்தொழிலை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தமையை கிறீன்லாந்து விரும்பவில்லை. அதனால், ஐரோப்பிய யூனியனில் இருந்து விலகுவதா? இல்லையா? என பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது. அப்பொழுது கிரீன்லாந்து மக்களில் நூற்றுக்கு 52% மானோர் கிரீன்லாந்து ஐரோப்பிய யூனியனில் இருந்து விலகவேண்டுமென வாக்களித்தமை ஒரு வரலாற்று நிகழ்வாகும்.





மகிழ்ச்சியில் பிரித்தானியர்கள்

சுமார் **56,000** மக்கள் மாத்திரம் வாழும் கிரீன்லாந்து ஐரோப்பிய யூனியனில் இருந்து விலகியது போல் பெரிய பிரித்தானியாவால் இலகுவில் விலக முடியாது. பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் கோடன் பிரவுன் ஐக்கிய இராச்சியத்திற்காக 2007 இல் லிஸ்பன் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார். அதில் 50 ஆவது வசனத்தில் "எந்தவொரு நாடும் ஐரோப்பிய யூனியனின் அங்கத்துவத்தில் இருந்து விலகுவதாயின், அது குறித்த சட்டதிட்டங்களும் நிபந்தனைகளும் படிமுறைகளும் உள்ளதாக" குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐரோப்பிய யூனியனின் தலைமையகம் பெல்ஜியம் நாட்டின் தலைநகரமாகிய பிரசல்ஸ் நகரில் அமைந்துள்ளது. பிரித்தானியா, ஐரோப்பிய யூனியனில் இருந்து விலகுவது குறித்து உத்தியோகபூர்வமாக பிரசல்ஸ் நகருக்கு அறிவித்த பின்னரே, லிஸ்பன் ஒப்பந்தத்திற்கு அமைவாக படிமுறைகள் ஆரம்பமாகும். (-அ)



பிரசல்ஸ் நகரில் அமைந்துள்ள ஐரோப்பிய யூனியனின் தலைமையகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முகாம் தீமூட்டியின் மூலம் தீ மூட்டுவோம்!



தச்சு வேலை செய்பவர்கள் கைகளினால் இயக்கும் 'தீமூட்டி' கருவியைப் பற்றி உங்களுக்கு தெரிந்திருக்கும். இத்தகைய தீமூட்டி கருவிக்குப் பதிலாக ஒரு கருவியை சாரணர்கள் உருவாக்கிக் கொள்ளமுடியும்.

இதனை சுழற்றும் போது, வெப்பம் அதிகரிப்பதால் தீப் பொறிகள் எழுகின்றன. இதற்கு உலர்ந்த பஞ்சுகளை பயன் படுத்த முடியும். இதனால் விரைவாக தீயை மூட்டிக் கொள்ளும் சாமர்த்தியம் சாரணர்களுக்கு ஏற்படும்.

## தீமூட்டி வகைகளை அறிதல்

இந்த மரத்துண்டுகளை குறுக்காகவும், நீளவாக்கிலும் பயன்படுத்திக் கொள்ள முடியும். இதற்காக படத்தில் காட்டியுள்ள மூன்று வழிமுறைகளையும் சாரணர்கள் பின்பற்ற முடியும்.

பி.கு- இறப்பர் கலந்த நெகிழ்வுறும் கயிறு இதற்குப் பொருத்தமாக இருக்கும்.

## விஜய் சாரணர் உலகம்









## கைப்பிடி ஒன்றினைப் பொருத்துவோம்!

உங்கள் வீடுகளில் உள்ள மண்வெட்டி மற்றும் இதர உபகரணங்களுக்கு இவ்வா றான கைப்பிடி ஒன்றினைப் பொருத்துவதற்கு முயலுங்கள். இந்த கைப்பிடியினை தயார் செய்வதற்கு கீழ்வரும் படக்குறிப்புகளை அவதானித்து படிப்படியாக மேற்கொள்ள வேண்டும். சாரணர்களுக்கு தேவைப்படும் கைக் கோடாரிகள், மற்றும் இதர உபகரணங்களுக்கு இந்த கைப்பிடியினைப் பொருத்திக் கொள்ள முடியும்.

கைப்பிடியினைப் பொருத்துவதற்கு பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுங்கள்


★ படக்குறிப்பில் உள்ளவாறு 'இரண்டு பலகை ஆணிகளை' தயாரித்து கொள்க.(இந்த ஆணியினை தயாரிப்பதற்கு பாக்கு மரப்பட்டையைப் பயன்படுத்துங்கள்)

★ தயாரிக்கப்பட்ட ஆணியினை படத்தில் காட்டியவாறு மரத்தடியுடன் சொருகுங்கள்.

★ நன்கு ஒட்டும் பசையினால் பலகை பிடியினையும், கைப்பிடியினையும் பொருத்தும் இடத்தினை நிரப்புங்கள்.

★ இரண்டு நாட்களின் பின்னர் ஒட்டுப்பசை மற்றும் பலகை ஆணிகளின் பகுதியினை வெட்டி அகற்றுங்கள்.

★ இவ்வாறு தயாரிக்கப்பட்ட கைப்பிடி பொருத்தப்பட்ட கோடாரி அல்லது மண்வெட்டியை நீண்ட காலம் பாவிக்க முடியும்.




## அமெரிக்காவின் தொடர்பாடல் செயற்றிட்டம் ஆரம்பம்

சர்வதேச சாரணர் தலைமை யகம் அறிமுகம் செய்து வைத்த '2023' உலக சாரணர் எதிர்கால வேலைத்திட்டத்தின் மூலம் அமெரிக்க சாரணர் பிராந்தியம் மற்றும் அமெரிக்கா தமது இலக்கினை அடைவதற்கு 'மக்கள் தொடர்பூடகங்களை' பயன்படுத்தும் வழிமுறை குறித்து அண்மையில் வெளிப்படுத் தியிருந்தது. இந்த திட்டம் உலகளாவிய அனைத்து சாரணர்களுக்கும் அவசியமானது. இதனால், உலகின் அனைத்து சாரணர்களும் வரைவுப்பிரதி ஒன்றினை உருவாக்க வேண்டும். இதன்போது இதற்கென உரிய பல வேலைத் திட்டங்களும் உள்ளன.

அவையாவன:

★ படைப்பாற்றல் மிக்க செய்தி அறிக்கையிடல்

★ படைப்பாற்றல் மிக்க தொடர்பாடலின் முக்கியத்துவம்






★ சாரணர் இயக்கத்தின் கௌரவத்தினைப் பாதுகாத்தல்

★ சாரணர் இயக்கம் குறித்து சமூக எண்ணப்பாட்டினை அறிந்துகொள்வதற்கு ஆய்வுகளை மேற்கொள்ளல்


★ புதிய பிரசார வேலைத்திட் டங்களை ஆரம்பித்தல்

ஆகியவை இனம் காணப்பட்டுள்ளன. இதற்கென அமெரிக்கா முழுவதும் உள்ள வெகுஜன ஊடகங்கள் மற்றும் சமூக அமைப்புகள், கடித தபால் உட்பட புகைப்படங்கள் மூலம் அமெரிக்க சாரணர்களின் செய்திகள் சமூகத்தில் பரவுவதற்கு இடமளிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## படங்களைக் கூட்டி, வரும் விடையில் வட்டமிடுக





| | |
|---|---|
| + = | 456 |
| + = | 789 |
| + = | 789 |
| + = | 567 |
| + = | 567 |
| + = | 789 |

## கீழுள்ள உருக்களை பிரதான படத்தில் இனங்கண்டு, நிறந்தீட்டுக




## அறிவுக்கு விருந்து (13.07.2016) விடைகள்






| raft | b | p | b | i | h | t | h | b | b |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| hike | r | g | r | k | w | n | i | w | r |
| kiwi | e | l | a | z | m | f | k | j | a |
| branch | h | o | n | a | v | o | e | o | f |
| sweater | c | g | c | p | b | n | u | p | t |
| teacher | a | v | h | j | g | q | z | t | u |
| lolipop | e | c | n | z | t | i | w | i | k |
| log | t | r | e | t | a | e | w | s | t |
| | i | l | o | l | i | p | o | p | j |

## குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்கமைத்து, சரியான சொல்லை எழுதுங்கள்




| | |
|---|---|
| rncouni ______ | terquar ______ |
| oldl ______ | nlae ______ |
| ordo ______ | palpe ______ |

## வெற்றிடங்களுக்குப் பொருத்தமான பகுதிகளுடன் இணையுங்கள்



## குறுக்கெழுத்துப் போட்டி: 198




### மேலிருந்து கீழ்

01. நல்ல நேரம்.
02. துன்பம்.
03. '.......... ஓடியும் திரவியம் தேடு'.
05. கீரை வகையொன்று.
07. சிரம்.
08. வெற்றி. (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

01. இலக்குமணனின் தாய்.
04. கட்டடங்களில் ஏறி - இறங்க அமைக்கப்பட்டிருப்பது.
05. (தமிழ் நெடுங்கணக்கில்) முதல் எழுத்து.
06. ஆணை. (குழம்பியுள்ளது)
08. காய்ந்தது. (குழம்பியுள்ளது)
09. பாதைகள் சந்திக்குமிடம்.

### குறுக்கெழுத்துப் போட்டி: 197 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 வி | ல | ங் | 2 கி | ய | ல் |
| பூ | | | ர | | 3 கா |
| 4 தி | ர | வி | ய | ம் | |
| | 5 க | | ம் | ச | 6 தே |
| 7 ச | க | தி | | ச் | |
| ய | ம் | 8 சா | | 9 அ | வை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2087
கொழும்பு



எஸ். பாத்திமா றிப்கா,
சாஹிரா ம.வித்,. அநுராதபுரம்.




யோ. திலீபன் திவா,
பரிசுத்த திருத்துவ ஆ. கல்,. நுவரெலியா.



கோடிஷ்வரன்,
ஸ்ரீ சண்முகானந்தா த.வித்,.
ஹாலி-எல.



வி.ஐங்கரன்,
விபுலானந்தாக் கல்,. வவுனியா.



மொகமட் நப்ராஸ்,
அல்-ஹம்ரா ம. வித்,. தர்கா நகர்.



எஸ். ஷரப்,
அல் அஸ்கர் மு.ம.வித்,.
ஹெம்மாதகமை



என்.அபிநயா,
இ.எம்பி/மாதம்பை இல.02 த.வித்,.
இரக்குவானை.




வி. அஷ்வின்,
கிலைன்ளைன் த.வித்,.
அக்கரைப்பத்தனை.




மு.அகேஷன்,
ஸ்ரீ கோணேஸ்வரா இ.கல்,.
திருகோணமலை.



பி. லத்திக்கா,
ஆனைப்பந்தி மெ.மி.வித்,.
யாழ்ப்பாணம்.



எம். அர்ஷாட்,
சென் ஜோசப்.கல்,. மஸ்கெலியா

# தடைகளைத் தாண்டி வாழ்தல்

ஒவ்வொரு மனிதருக்கும் ஏதோ ஒரு வகையில் பிரச்சினைகள் இருக்கின்றன. பிரச்சினைகள் இல்லாத மனிதர்கள், தோல்விகளை சந்திக்காத மனிதர்கள் உலகில் இல்லை.

தோல்விகள் அல்லது தடைகளை சந்திக்கும் போதுதான் மனிதர்கள் வாழ்கையின் அர்த்தங்களைப் புரிந்து



கொள்கின்றனர். அனுபவங்களையும் பெற்றுக் கொள்கின்றனர். எனினும், தோல்வி ஒன்றின் மூலம் அனுடவங்கள் அல்லது பட்டறிவைப் பெறுவதைவிட, முன் எச்சரிக்கை நடவடிக்கை மூலம் அல்லது முன் எச்சரிகையான சிந்தனைகள் மூலம் தடைகளை, தோல்விகளை தவிர்ப்பது நலமானது.

அனேகமாக, சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஒவ்வொருவருக்கும் மாறுபட்ட வகையில் பிரச்சினைகள் இருக்கின்றன. அந்த வகையில் பரீட்சைகளில் அதிகளவான புள்ளிகளைப் பெறவேண்டும், பரீட்சை தொடர்பில் போட்டிகளை எதிர்கொள்ளவேண்டும் போன்ற பிரச்சினைகள் மாணவர்களுக்கு உள்ளன. இவ்வாறே, பொருளாதார கஷ்டங்கள் இருப்பின் அவற்றை எதிர்கொண்டு கல்வியை தொடரவேண்டும் எனும் பிரச்சினைகளும் இருக்கின்றன.


மேலும் இளைஞர்கள், யுவதிகளுக்கு கற்கையின் பின் நல்ல வேலை வாய்ப்பைப் பெறவேண்டும் எனும் பிரச்சினைகள் உள்ளன. குடும்பஸ்தர் ஒருவருக்கு தமது குடும்பத்தைக் கொண்டு நடத்துவதில் உள்ள பிரச்சினைகள்.

முதியவர்களுக்கு தமது ஆரோக்கியம் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள். இவ்வாறு வாழ்க்கையில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் வரவே செய்கின்றன.

எனினும் தமக்கு ஏற்படும் கஷ்டங்கள், துன்பங்கள், தோல்விகள், தடைகள், ஏமாற்றங்களை மன வலிமையுடன் எதிர்கொள்வதே நல்லது.

இதேவேளை, பிரச்சினைகள் எம்மைச் சுற்றியே வருகின்றன. எமக்கு மாத்திரம் தான் பிரச்சினைகள் இருக்கின்றன என நினைப்பது ஆரோக்கியமான மன நிலையல்ல...

# ஒளியின் வேகம்



மழைக் காலங்களில் மின்னலின் பின்னரே, இடி முழங்குவதை நாம் உணர்கின்றோம். இதற்கு ஒலியின் வேகத்தைவிட ஒளியின் வேகம் அதிகம் என்பதே காரணமாகும்.

ஒலியின் வேகம் 20 டிகிரி வெப்ப நிலையில் கடல்மட்டம் மற்றும் வளியில் 1 விநாடிக்கு 343 மீற்றர் மட்டுமே பயணிக்கின்றது. ஆனால் ஒளியின் வேகமானது, மிக மிக அதிகம். அது விநாடிக்கு 299,792, 458 மீற்றர் பயணிக்கின்றது. ஒளியின் இந்த வேக அளவானது, அறிவியல் மற்றும் கணக்கு முறைகளில் பயன்படும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அளவாகும்.

ஒளியின் வேகத்தை முதன் முதலில் கண்டுபிடிக்க முயற்சித்தவர், கலிலியோ கலிலி ஆவர். இவர் தமது ஆய்வுகளை 1630 இல் மேற்கொண்டார். மேலும் மனித இனமானது, ஒளியின் வேகத்தை விட மிகைப்பட்ட வேக அளவு ஒன்றை இதுவரை கண்டறியவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அறிவியல் காரணங்களால் தகர்த்தெறியப்படும் பேய் வீடுகள்!



அதோ, அந்தப் பேய் வீட்டில் நிறைய ஆவிகள் இருக்கின்றன. அந்த வீட்டினுள் அடிக்கடி மர்மமான சத்தங்கள் கேட்கும். தெளிவற்ற உருவங்கள் தெரியும், யாரோ பின்னாடி நின்று தொடுகின்றது போல இருக்கும் என பல கதைகளைக் கூறி உங்களை பயமுறுத்தும் காலம் போய்விட்டது.



இவ்வாறான உணர்வுகள் எழும் காரணங்கள் எவையென புதிய அறிவியல் ஆய்வில் கண்டறிந்துள்ளனர். இந்த ஆய்வின்மூலம் பல காரணிகளை எடுத்துரைத்துள்ளார்கள்.

★ மனிதர்களின் சிலரது மூளையில் ஏற்படும் சிறு மின்னூட்டல் (electricatonl) விளைவானது, தன்னிலையை மறக்கச் செய்கின்றது. இதன்போது மூளையில் உண்மையை உணரச்செய்யும் சுய உணர்தல் தொழிற்பாடு செயலிழக்கின்றது. இதனால், தாம் செய்கின்றவற்றை வேறு யாரோ செய்விப்பது போல உணர்கின்றனர் என அறிவியலாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

★ தாழ் மீடிறன் கொண்ட ஒலிகள் எமக்கு கேட்பதில்லை. ஆனால், எம் காதுகள் சிலவேளைகளில் அவற்றை உணரும். அப்போது எம்முள் ஒருவித அச்ச உணர்வை ஏற்படுத்தும். இதற்கு இயற்கைதான் காரணமாகின்றது. ஆட்கள் நடமாட்டம் இல்லாத பிரதேசத்தில் தூரத்திலுள்ள ஏதேனும் இயக்கத்தினாலோ அல்லது பூமியின் இயற்கையாக இடம்பெறும் மிகத் தாழ் மீடிறன் இவ்வாறான அச்ச உணர்வை ஏற்படுத்தும்.

★ பேய் உலாவுவதாக சொல்லப்பட்ட பல இடங்களை ஆராய்ந்ததில் அங்குள்ள காற்றில் சில விசித்திரமான, தீங்கான வாயுக்கள் காணப்படுவதால் அதனை சுவாசிக்கும் எமது புலன்களான பார்வை, கேட்டல், தொடுகை பாதிப்படைவதாக தெரிய வந்துள்ளது.

ஆகவே, புலன்கள் செயலற்றுப் போவதாலும் தாழ்வான மீடிறன் கொண்ட ஒலிகளைக் கேட்பதினாலும் சில சமயங்களில் எது உண்மை? எது கற்பனை? என்று உணர முடியாத நிலைக்கு நம் செல்வதால் இவ்வாறான செயற்பாடுகள் நிறைந்த ஆட்கள் இல்லாத அமைதியான இடங்களை அல்லது வீடுகளை நம் அச்ச உணர்வுடன் 'பேய் வீடுகள்' என்று சொல்கின்றோம்.

## வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

★ Practical English Learning Software DVD



★ 4000 English Letter Writing Software



★ 8 GB Pen Drive



புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன்கிழமையிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்கத் தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

★ 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்...

★ ஆங்கிலம் கற்கும் மென்பொருள் DVD

★ 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்

★ 8GB பென் டிரைவ் போன்றன இலவசமாக வழங்கப்படும்.

13.07.2016 'தூவானம்' கேள்விக்கான விடை:
**1913.12.21**
Pendrive வெற்றியாளர்:
சு.நிருக்ஷான்,
புதிய தபால் வீதி, குறுமண்வெளி - 12,
களுவாஞ்சிக்குடி.

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை

Write Message
F Thoovaanam
என Type செய்து
40404 எனும்
இலக்கத்திற்கு
SMS செய்யவும்

அனுப்ப வேண்டிய முகவரி:
Pen Drive போட்டி
(27.07.2016)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

இவ்வார கூப்பன்:
27.07.2016
விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தெ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................
..................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கங்காரு தன் குட்டிகளை தனது உடம்பில் உள்ள பையில் சுமந்து செல்வதைக் கண்டிருப்பீர்கள். கங்காருவின் இந்த குட்டிகள் முழுமையாக வளர்ச்சியடைவதற்கு முன்பே பிறந்துவிடுகின்றன. மிகுதி வளர்ச்சியெல்லாம் தாய் கங்காருவின் வயிற்றுப் பையில்தான் நடைபெறுகின்றது.

## வளர்ச்சியடைவதற்கு முன்னமே பிறக்கின்ற கங்காருக் குட்டி!

குட்டி, பிறந்த உடனே தாயின் வயிறு வழியாக ஊர்ந்து பைக்குள் வந்துவிடும். பிரசவ நேரத்தில் கங்காரு, குட்டி வெளியே வருகிற துளை முதல் வயிற்றின் மேல் பகுதிவரையான பாகத்தை நக்கும். இப்படி நக்கி நக்கி தன் உடல் ரோமத்தின் வழியே ஒரு பாதையை ஏற்படுத்தும். குட்டி இந்தப் பாதை வழியே ஊர்ந்து பைக்குள் வந்துவிடும். தன் தாயின் பாலைத் தவிர மற்றவற்றை ஆரம்பத்தில் உண்ணாது. உண்ணும் திறன் வரும்வரை குட்டியானது, தாயின் பைக்குள்ளேயேதான் இருக்கும். குட்டியின் உடற்பகுதிகள் எல்லாம் முழுமையாக வளர்ச்சியடைந்த பிறகுதான் தாய் கங்காரு, தன் குட்டியை கீழே இறக்கிவிடும். பிறகு எப்போதாவது நரியோ, கழுகோ மற்ற விலங்குகளோ பிடிக்க வரும்போது குட்டி ஓடி வந்து தன் தாயின் பைக்குள் ஏறி ஒளிந்துகொள்ளும்.

## நவீன 'ஸ்டெம்செல்' சிகிச்சை முறை



நவீன மருத்துவத் துறையின் ஒரு வளர்ச்சிப்படியாக 'ஸ்டெம்செல்' எனும் சிகிச்சை முறை வெற்றிகரமாக அமையப்பெற்றுள்ளது. இதற்கமைய 'ஸ்டெம்செல்' சிகிச்சையின்மூலம் பல்வேறு நோய்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுகின்றது. இந்தச் சிகிச்சையின்மூலம் மனித உடலில் திசுக்கள் மற்றும் பல்வேறு உறுப்புகளில் ஏற்படும் சேதங்கள் நிரந்தரமாகச் சீரமைக்கப்படுகின்றன.

எலும்பு மச்சை, கருப்பையில் உள்ள கரு, விழி வெண்படலம், ரத்தம், பல், கல்லீரல் ஆகியவற்றின் திசுக்களில் இருந்து 'ஸ்டெம்செல்'கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மனித உடலின் பாதிக்கப்பட்ட பகுதியில் இந்த 'ஸ்டெம்செல்' களைச் செலுத்துவதன் மூலம் குறித்த நோய் பாதிப்பில் இருந்தும், அதனால் ஏற்பட்ட சேதத்தில் இருந்தும் நிரந்தரமாக குணமடையச் செய்யப்படுகின்றது.



## சிலந்தி தன்வலையில் ஏன் சிக்குவதில்லை...?

சிலந்தி தான் கட்டிய வலையில் ஏன் சிக்கிக்கொள்வதில்லை தெரியுமா? சிலந்தி வலையில் வட்டமாகவும், குறுக்காகவும் இழைகள் இருக்கும். அதில் வட்டத்தில் உள்ள இழைகளில்தான் பசை இருக்கும். குறுக்காகச் செல்கின்ற இழைகளில் பசை இருக்காது. சிலந்தி அதன் வலையில் நடமாடும்போது, இந்த பசை இல்லாத குறுக்கு இழைகளில்தான் நடக்கும். வட்டமான இழைகளைத் தொடாது. அப்படி வட்ட இழைகளில் பட்டுவிட்டாலும் ஒட்டிக்கொள்ளாதிருக்க, அதன் வளைந்த கால்களும், கால்களில் உள்ள பிரத்தியேக ரோமங்களும் உதவுகின்றன.

# அசர்பைஜான்

கிழக்கு ஐரோப்பாவிலும் மற்றும் மேற்கு ஆசியாவிலும் அமைந்துள்ள அசர்பைஜான் நாடு. கொகேசியன் வலயத்திற்குரிய தீபகற்ப நாடாகும். இங்கு முதலாவது குடியேற்றம் கற்காலத்திலேயே நிகழ்ந்ததற்கான சான்றுகள் உள்ளன. இந்நாடு ஆர்மேனியர்களாலும் பாரசீகர்களாலும், துருக்கிய ஆட்சியாளர்களாலும் ஆட்சிக்குட்பட்டதோடு, 1920 இல் சோவியத் சமவுடமை குடியரசின் ஓர் அங்கமாகத் திகழ்ந்தது. பின்னர் 1991 இல் அதிலிருந்து பிரிந்து 1995 இல் குடியரசு அரசியலமைப்பை அங்கீகரித்துக் கொண்டது.



இங்கு 'சைதியன்ஸ்' எனும் குதிரை வீரர்கள் ஆரம்பக் குடிகளாவர்.



இங்குள்ள எண்ணெய் படிவு பிரதேசங்களில் நிரந்தரமாக தீப்பற்றுவதால் இந்நாட்டினை 'அசர்பைஜான்' என்றழைக்கின்றனர். இதன் அர்த்தம் 'தீ பற்றிய நிலம்' என்பதாகும்.

நாணயம் - மனாட்



இந்நாட்டினை அழகிய மலைத் தொடர்கள் சூழ்ந்துள்ளன.

**தேசிய மிருகம்** தேசிய மிருகம் - குதிரை தேசிய மலரோ, பறவையோ குறிப்பிடப்படவில்லை.

புகழ்பெற்ற 'ஷிர்வன்ஷாசாஹ்' அரச மாளிகை.

**அரசியல்** அசர்பைஜானின் நாடாளுமன்றம்

ஜனாதிபதி - இப்ஹாம் அலியெவ்

**இனங்கள்** 91.6% அசர்பைஜான்; 02% லெஸ்கியன்; 1.3% ரஷ்யர்; 1.3% ஆர்மேனியன்; 1.3% டலிஸ்; 2.4% ஏனையோர்

**மொழி** அசர்பைஜான் 92.5%, ரஷ்யர் 1.4%, ஆர்மேனியன் 1.4%, ஏனையோர் 2.4%

**சமயம்** இஸ்லாமியம் 96.9%, கிறிஸ்தம் 3% ஏனையவை 1.0%

**இயற்கை வளம்** பெற்றோலியம், இயற்கை வாயு, இரும்பு, பொக்சைட், இரும்பு அல்லாத உலோகங்கள்.




ஆபரண தயாரிப்புகளுக்கு புகழ்பெற்ற நாடு.

எண்ணெய் வளமிக்க நாடு.

பாரம்பரிய நிலவிரிப்புகள் தயாரிக்கப்படுகின்றன.

மோட்டார் இயந்திரங்கள் தயாரிக்கப்படுகின்றன.

பித்தளைப் பொருட்களின் உற்பத்தி.

குளிரூட்டிகள் பெருமளவில் தயாரிக்கப்படுகின்றன.

மாதுளம் பழம் சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இஸ்லாமிய பள்ளிவாசல் ஒன்று.

உணவுத் தேவைக்காக கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன.

மீன் வளம் மிக்க நாடு.

**தலைநகரமும் பெரிய நகரமும்**



இங்கு சூரியகாந்தி மலர், புகையிலை, பருத்தி, தேயிலை மற்றும் கறுவா என்பன பயிர் செய்யப்படுகின்றன.

விவசாயம் முக்கிய வாழ்வாதாரமாகும்.



பாரம்பரிய உடை ஒன்று.

பாரம்பரிய நடனம்

noolaham.org | aavanaham.org

# வேற்றுக்கிரகவாசிகளைத் தேடும் ரொபோ ரொபர்ட்



வேற்றுக்கிரகவாசிகள் பற்றி அறிந்து கொள்வதற்கு எமக்கு செயற்கையாக உருவாக்கப்பட்ட மென்பொருள் அவசியமாகும். இந்த மென்பொருள் பிரபஞ்சத்தின் தொலைவில் இருந்து வெளியாகும் சமிக்ஞைகள், ஒலி அலைகள் பற்றிய தரவுகளை சேகரித்து அதன்மூலம் வேற்றுக்கிரகங்களில் உயிரிகள் வசிக்கின்றனவா? என்பதைக் கண்டுபிடிப்பதற்கு உதவுகின்றது. தற்போது இந்த மென்பொருளை ரொபோவாக உருவாக்கி அதற்கு விஞ்ஞானிகள் 'ரொபர்ட்' என்று பெயர் சூட்டியுள்ளனர். இதன் அர்த்தம் 'வேற்றுக்கிரகவாசிகளை கண்டுபிடிக்கும் ரொபோ' என்பதாகும்.

## ரொபர்ட்

எமது சூரியத்தொகுதிக்கு அப்பால் உள்ள கிரகங்களில் உயிர்கள் உள்ளனவா? இல்லையா? என்பதை பற்றி இந்த ரொபர்ட் மென்பொருளின்மூலம் பல ஆண்டுகளாக வானியல் அறிஞர்கள் ஆய்வுகளைச் செய்துள்ளார்கள்.

## புதிய ஆராய்ச்சி

வேற்றுக்கிரகவாசிகளை ரொபர்ட் தேடும் நடவடிக்கை தற்போது ஆரம்பமாகியுள்ள நிலையில் இந்த ஆராய்ச்சி முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளை போன்றதாக அமையவில்லை. அந்தவகையில், இதற்கு முன்னர் வேற்றுக்கிரகவாசிகளைக் கண்டுபிடிப்பதற்கான 'செற்' செயற்றிட்டம் போன்று பிரபஞ்சத்திலிருந்து வேற்றுக் கிரகவாசிகளின் விமானங்கள் வருமாயின் அவற்றின் மின் சமிக்ஞைகள் ரொபர்ட்டினால் அவதானிக்கப்படமாட்டாது. மாறாக, புவியில் உள்ள ரேடியோ தொலைக்காட்டியினை பூமியினைப் போன்றிருக்கும் கிரகங்களில் செலுத்தி அதன் மூலம் பெறப்படும் அலை வரிசைகளைப் பயன்படுத்தி 'ரொபா'ட்' மென்பொருள் இயங்குவதாக அதனை உருவாக்கிய விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.

## ஒரேவிதமான கிரகங்கள்

பூமியினைப் போன்று தற்போது 86 கிரகங்கள் உள்ளதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். இந்த கிரகங்களில் இருந்து வானொலி அலைகள் வெளியாகி இருப்பின் அவற்றை பூமியில் உள்ள வானொலி அலை, தொலைக்காட்டிகள் மூலம் பெற்றுக்கொண்டு அந்த கிரகங்களில் உயிரினங்கள் வசிப்பதனை அறிந்து கொள்ள முடியும்.

## கெப்லர்

இந்த புதிய 86 கிரகங்கள் பற்றி விஞ்ஞானிகள் ஆராய்ந்தாலும் இது வரை மொத்தமாக பூமியினைப் போன்று 1,235 கிரகங்களை கண்டுபிடித்துள்ளதாக நாஸா விஞ்ஞானிகள் மேலும் தெரிவித்துள்ளார்கள். நாஸாவின் 'கெப்லர்' தொலைக்காட்டியின் மூலம் இந்த கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பூமியைப் போன்ற கிரகங்களைக் கண்டுபிடிக்கவே, நாஸா விஞ்ஞானிகள் கெப்ளர் தொலைக்காட்டியினை உருவாக்கியுள்ளார்கள். (-இ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேநீரின் அறிமுகம்





தேநீர் தயாரிப்பைக் கண்டுபிடித்தது சீனர்கள் ஆவர். கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் தென் மேற்கு சீனாவில் ஷாங் பேரரசர்கள் தேநீரை மருந்தாகப் பயன்படுத்தியதற்கான வரலாற்று சான்றுகள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.எனினும், முதன்முதலில் தேநீரை ஒரு பானமாக அருந்துவதை அன்றாட வழக்கத்திற்குக் கொண்டு வந்தவர்கள் ஜப்பானியர்கள் என்றே கூறப்படுகின்றது. அந்தவகையில், தேநீர் அருந்தும் பழக்கம் கி.மு. 800 களில் ஜப்பானுக்குப் பரவியுள்ளது. ஜப்பானிலிருந்தே ஐரோப்பிய நாடுகளுக்கு தேயிலை அறிமுகமாகியுள்ளது.

17 ஆம் நூற்றாண்டில்தான் பிரித்தானியாவில் தேநீர் பிரபலமடைந்துள்ளது. இதன் பின்னர் பிரித்தானியர்கள் தமது ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடுகளில் தேயிலை பயிர்ச்செய்கையை அறிமுகப்படுத்தினர். அந்த நாடுகளில் இலங்கையும் ஒன்று. இன்றளவில் உலகின் தேயிலை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி செய்யும் பிரதான நாடுகளில் ஒன்றாக இலங்கையும் திகழ்கின்றது.



## கண்ணழகை மெருகூட்டும் கண் மை



கண்களின் அழகை மேலும் மெருகூட்ட கண் மை இடப்படுகின்றது. இதனால் கண்களுக்கு குளிர்ச்சியும் கிடைப்பதாக கூறப்படுகின்றது. கண் மை பூசும் வழக்கத்தை எகிப்தியர்கள்தான் முதன்முதலில் அறிமுகப்படுத்தியுள்ளனர். சூரிய ஒளியினால் கண்கள் பாதிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தினாலேயே, கண்களுக்கு கண் மை பூசும் வழக்கம் எகிப்தியர்களிடையே தோன்றியதாகக் கூறப்படுகின்றது.



## நீங்கள் படிக்கும் இடம் இப்படி இருக்கிறதா?

★ எந்த நேரத்திலும் போதுமானளவு வெளிச்சம் கிடைக்கும் இடமாக இருக்க வேண்டும்.

★ படிக்கும் இடம் சிறியதாக இருந்தாலும், அது உங்கள் கவனத்தை திசை திருப்பக்கூடியதாக இருக்கக்கூடாது.

★ நல்ல காற்றோட்டம் உள்ள இடமாக இருக்க வேண்டும்.

★ உங்கள் படிப்புக்குத் தேவையான புத்தகங்கள் உட்பட, கல்வி உபகரணங்கள் அனைத்தையும் வைத்திருக்கக்கூடிய இடமாக இருக்க வேண்டும்.

★ இரைச்சல் அற்ற- அமைதியான இடமாக இருக்க வேண்டும்.

★ படிக்கும் இடத்தில் கடிகாரம், நேர அட்டவணை என்பன கட்டாயம் இருக்க வேண்டும்.

★ படிப்பதற்கு உங்களை உற்சாகப்படுத்தக்கூடிய வாசகங்கள், கற்றலுக்கு உதவும் வரைபடங்கள் என்பனவற்றையும் கண்களுக்குத் தெரியும் வகையில் வைத்திருப்பதன்மூலம், படிப்பில் ஆர்வம் ஏற்படும்.

★ உங்கள் கதிரை, உட்காருவதற்கு வசதியானதாக இருக்க வேண்டும்.




## இவ்வார கார்ட்டூன் படம்







இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, ஜூலை 27 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No.8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday July 27, 2016.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org